02.09.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## 5,441 பசுமை வீடுகளுக்கு விரைவில் விடிவுகாலம்! சோலார் விளக்கு அமைக்க நடவடிக்கை



கடலூர் : மாவட்டத்தில் கட்டி முடித்து, சோலார் விளக்கு அமைக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த பசுமை வீடுகளுக்கு விரைவில் விடிவுகாலம் பிறக்க உள்ளது.

தமிழகத்தில் அதிகரித்து வரும் மின் தேவையை கருத்தில் கொண்டு, எதிர்காலத்தில் வரும் மின் பிரச்னையை சமாளிக்கும் பொருட்டு கடந்த 2011ம் ஆண்டு மூன்றாம் முறையாக தமிழக முதல்வராக பொறுப்பேற்ற ஜெ., பல அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதில், ஒரு

பகுதியாக தேர்தல் வாக்குறுதியில் அளித்தபடி சொந்த இடத்தில், கூரை வீடுகளில் வசிப்பவர்களுக்கு சோலார் விளக்கு வசதியுடன் பசுமை வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டார். இத்திட்டத்தில் 300 சதுர அடி பரப்பளவில் வீடு கட்ட ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், சூரிய மின் சக்தி வசதி ஏற்படுத்த 30 ஆயிரம் ரூபாய் என ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அது தற்போது 2 லட்சத்து 30 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், 'தானே' புயல் பாதித்த கடலூர் மாவட்டத்திற்கு முன்னுரிமை அளித்து கடந்த 2011--12 நிதியாண்டில் 2,723 வீடுகளும், 2012 - -13ம் ஆண்டில் 2,713 வீடுகளும், 2013 --14ம் ஆண்டில் 2,713 வீடுகளும், 2014-15 நிதியாண்டில் 2,728 வீடுகளும், இந்த 2015-16ம் நிதியாண்டில் 731 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஊரக வளர்ச்சி முகமை மேற்பார்வையில் கட்டப்பட்டு வரும் இந்த வீடுகளுக்கு தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி முகமை (டடா) மூலம் ஒவ்வொரு வீட்டிலும் '9 வாட்ஸ்' சி.எப்.எல்., 5 பல்புகளுக்கு பிரத்யோகமான ஒயரிங் செய்து '250 வாட்ஸ்' திறன் கொண்ட பேனல் (சூரிய சக்தியை கிரகித்து மின்சாரமாக மாற்றும் பலகை), பேனலில் உற்பத்தியாகும் மின்சாரத்தை சேமித்து வைக்க பேட்டரி மற்றும் இன்வெர்ட்டருடன் சோலார் விளக்குகள் அமைக்கப்பட்டு வருகிறது.

இப்பணிக்கு 'டடா' மூலம் ஒவ்வொரு ஆண்டும் டெண்டர் விடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி மாவட்டத்தில் கடந்த 2011-12 மற்றும் 2012-13ம் நிதியாண்டுகளில் ஒதுக்கீடு செய்து கட்டி முடிக்கப்பட்டுள்ள 5,436 பசுமை வீடுகளுக்கு சோலார் விளக்குகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. 2013-14 மற்றும் 2014-15 நிதியாண்டுகளில் மாவட்டத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 5,441 வீடுகளுக்கு சோலார் விளக்குகள் அமைக்கும் பணி நிர்வாக சிக்கல்

காரணமாக தாமதமாகியது. இதனால், வீடுகள் கட்டி முடித்த நிலையில் பயனாளிகள் மின்சாரத்தையே பயன்படுத்தும் நிலை இருந்ததால் பயனாளிகள் மத்தியில் அதிருப்தி நிலவியது.

இந்நிலையில், விரைவில் பொதுத் தேர்தல் வர இருப்பதையொட்டி, பசுமை வீடு பணிகளை விரைந்து முடிக்க அரசு உத்தரவிட்டுள்ளது. அதன்பேரில், கடந்த 2013-14 மற்றும் 2014-15 நிதியாண்டில் கட்டி முடித்து சோலார் விளக்கு வசதி ஏற்படுத்தாமல் கிடப்பில் போடப்பட்ட பசுமை வீடுகளுக்கு சோலார் விளக்கு அமைக்க 'டடா' நிறுவனம் மூலம் டெண்டர் விடப்பட்டு இரண்டு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன. இதனால், கடந்த இரண்டு நிதியாண்டுகளில் கட்டப்பட்டுள்ள பசுமை வீடுகளுக்கு சோலார் விளக்குகள் அமைக்கும் பணி இம்மாத இறுதியில் துவங்கி, இந்தாண்டிற்குள் முடிக்க ஊரக வளர்ச்சி முகமை அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். இதனால், தேர்தலுக்குள் மாவட்டத்தில் உள்ள அனைத்து பசுமை வீடுகளிலும், சோலார் விளக்குகள் ஒளிரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கைநிறைய சம்பாதிக்க "கண்வலி' கிழங்கு சாகுபடி



விவசாயிகள் பலர் கஷ்டப்பட்டு உழைத்தும் பலன்கிடைக்காமல், விவசாயத்தையே கைவிடும் நிலைக்கு ஆளாகி வருகின்றனர். சிலர் வாங்கிய கடனை திருப்பி தரமுடியாமல், தற்கொலை செய்யும் அளவுக்கு போய்விடுகின்றனர். சிலர் மட்டுமே, எந்த பருவத்தில் எதைச் செய்தால் லாபம் ஈட்டமுடியும் என அறிந்து, விவசாயத்தில் சாதனை புரிகின்றனர். அந்தவரிசையில், ஒட்டன்சத்திரம் விராலிக்கோட்டை விவசாயி டி.சின்னச்சாமி மருத்துவ குணமிக்க "கண்வலி' கிழங்கு சாகுபடியில் ஆண்டுதோறும் ரூ.பல லட்சம் வருமானம் பார்க்கிறார். எப்படி சாதித்தார் அவர். இதோ கூறுகிறார்: கண்வலி கிழங்கு சாகுபடிக்கு ஏற்ற மாதம் ஆடி, ஆவணி, புரட்டாசி தான். அந்த சமயத்தில் கிழங்குகளை நட்டால் தான் அடுத்த அடுத்த ஆண்டுகளில் பலன் நன்றாக கிடைக்கும். நான் மூன்று ஏக்கரில் நடவு செய்ய ஆந்திரா மாநிலத்தில் இருந்து ஒரு கிலோ ரூ.250 வீதம் 500 கிலோ "கண்வலி' கிழங்குகள் வாங்கினேன்.

சாகுபடிக்கு, நிலத்தில் சிறிய குழிதோண்டி கிழங்குகளை வரிசையாக புதைக்க வேண்டும். கம்பி, பந்தல் அமைக்க வேண்டும். நிறைய தண்ணீர் தேவை இல்லை. சொட்டுநீர் பாசனமுறை சிறந்தது. மண்ணில் புதைத்த கிழங்குகள் 20 நாட்களில் துளிர்விட்டு, செடி பந்தலுக்கு வந்துவிடும். நான்கு மாதங்களில் பூத்து, காய்க்க துவங்கும், கோவைப் பழம் போல காய்கள் இருக்கும். அவற்றை பறித்து தட்டி விதைகளை எடுத்து நன்றாக காயவைக்க வேண்டும். 500 கிலோ கிழங்கில் 300 கிலோ விதை கிடைக்கும். மருத்துவத்திற்காக கண்வலி கிழங்கு விதைகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் திருப்பூர் மாவட்டம் மூலனூர் சந்தையில் ஒரு கிலோ ரூ.1200 முதல் ரூ.2000 வரை விலைகிடைக்கும். தொடர்ந்து அடுத்த ஆண்டில் ஆண்டிற்கு 100கிலோ கூடுதல் என மூன்று ஆண்டுகள் கண்வலி கிழங்கு செடி மூலம் ரூ.பல லட்சம் வருமானம் ஈட்டலாம். ஒரு

ஏக்கருக்கு கிழங்கு கொள்முதல் செலவு போக மருந்து, உரம், காய்பறிப்பு கூலி என ரூ.50 ஆயிரம் வரை செலவாகும். முதல் ஆண்டு ஓர் அளவிற்கு தான் லாபம் கிடைக்கும். அடுத்த இரண்டு ஆண்டுகளில் மருந்து, உரமிட்டு கண்ணும் கருத்துமாக வளர்த்தால் ரூ.பல லட்சம் லாபம் ஈட்டலாம். கண்வலி கிழங்குக்கு கரிசல் மண் ஆகாது. கச்சமண், செம்மண், மலமண் ஏற்றது. மேற்சொன்ன பருவத்தே கண்வலி கிழங்கு "கரெக்டா' சாகுபடி செய்தால் கைநிறைய பணம் அள்ளலாம், என்றார். இவரை தொடர்பு கொள்ள 97867 99763.
**-முருகன், பழநி.**

## ஏலத்தோட்டத்தில் காளான் விவசாயம்

ஏலச்செடிகளுடன் காளான் வளர்ப்பு என்ற கொள்கையை பரிசோதித்து வெற்றி பெற்றுள்ளார் மதுரை சரஸ்வதி நாராயணன் கல்லூரி தாவரவியல் துறை பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன். இது பற்றி அவர் கூறுகையில், ஏலத்தோட்டங்களில் நிலவும் காலச் சூழ்நிலையையும் சீதோஷண நிலைகளைப் பயன்படுத்தி குடில்கள் அமைக்காமல் இயற்கையில் ஏலச்செடிகளுடன் காளான் வளர்த்து ஏல விவசாயத்தை மிகவும் லாபகரமாகவும், ஆர்கனிக் முறைக்கு மாற்றும் முயற்சி இது. இம்முறையை பின்பற்றும் போது அது விவசாயிகளுக்கு பலவகை நன்மைகளை தருகிறது. குறைந்த செலவில் அதிக வருமானம் பன்மடங்காக உயர்கிறது. காளான் அறுவடை செய்தப்பின் கிடைக்கும் காளான் மைசீலியக் கழிவுகள் செடிகளுக்கு அடியில் இருக்கும் போது அது அழுகல் நோயை உண்டாகக்கூடிய பித்தியம், மற்றும் ரைசோகாட்டலின் போன்ற பூஞ்சைகளைக் கட்டுப்படுத்தி செடிகளை நோய் தாக்குதலிலிருந்து பாதுகாப்பதுடன் அதிக அளவு மகசூலையும் கொடுக்கிறது.

பல்வேறுப்பட்ட இரசாயன உரங்கள் மற்றும் பூச்சி கொல்லிகை நீண்ட காலமாக பயன்படுத்தி வந்ததின் விளைவாக மண்ணில் ஏற்பட்டுள்ள

இரசாயன மாற்றத்தையும் மண்ணில் குவிந்துள்ள பயன்படுத்திய இரசாயனங்களையும் உறிஞ்சி மண்ணின் தன்மையை தாவர வளர்ச்சிக்கேற்ற வகையில் மாற்றுகிறது. அதேபோல் பல வீரியம் மிக்கப் பூசனக் கொல்லிகளை ஏலச் செடிகளுக்கு பயன்படுத்துவதால் அது ஏலத்தோட்டங்களிலுள்ள அனைத்து வகை நன்மை செய்யும் பூஞ்சைகளையும் அழித்து விடுவதால் மண்ணில் நடைபெற வேண்டிய மினரல் (சத்துக்களின்) சுழற்சி தடைபட்டு மண்ணின் உயிர்தன்மை இழந்து வருகிறது.

பேராசிரியரின் இப்புதுமை திட்டத்தை பயனாளிகளின் கைகளுக்கு கிடைக்கச் செய்யும் முயற்சிகளை மதுரையை மையமாகக் கொண்டு செயல்படும் கிளீன் மற்றும் கிரீன் எண்விரான்மெண்ட் பவுண்டேசன் என்ற தொண்டு நிறுவனம் செய்து வருகிறது. சோதனை முறையாக சுமார் ஒரு ஏக்கர் ஏலப்பயிருடன் காளான் வளர்ப்பை கேரள மாநிலம் இடுக்கி மாவட்டத்தில் செய்து வருகிறது. இம்முறை பற்றி பிற தகவல்களுக்கு 94863 26193 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**- டாக்டர் கு.ராஜேந்திரன்,**

**பேராசிரியர் தாவரவியல் துறை,**

**சரஸ்வதி நாராயணன் கல்லூரி,**

**மதுரை.**

## சின்ன சின்ன செய்திகள்



**நெல் சாகுபடி - அங்கக மேலாண்மை - விவசாயியின் அனுபவம்**: எந்த வகை வேளாண்மைக்கும் ஆதாரமாக இருப்பது மண்வளம் தான். மண் வளமாக இருக்க மண்புழுக்களை மட்டுமல்ல கண்ணுக்குத் தெரியாத

பலகோடிக்கணக்கான நுண்ணுயிர்களும் தேவை. பல தானிய விதைப்பு என்ற முறையை விவசாயி செயல்படுத்தி பல தானியங்களான கம்பு, கேழ்வரகு, சாமை, சோளம் இவற்றில் தலா 2 கிலோவும், (எண்ணெய் வித்துக்களில் எள், கடலை, கடுகு, ஆமணக்கு இவற்றில்) தயாரிக்கலாம். சணப்பு, தக்கைப்பூண்டு, கொளுஞ்சி இவைகளில் தலா 2 கிலோவும், வாசனை பயிர்களான சீரகம், வெந்தயம் இவற்றில் தலா 1 கிலோ வீதம் கலந்து விதைத்து தண்ணீர் பாய்ச்சி வளர்க்க வேண்டும். பூக்கத் துவங்கும் போது தண்ணீர் தேக்கி வைத்து டிராக்டர் கொண்டு உழுது மடக்கி தண்ணீர் தேங்கி நிற்கும் நிலையில் 4 முதல் 6 நாட்கள் வைத்தால் தழைகள் மக்கி உரமாக மாறும். பின்னர் வழக்கமாக நாற்று நடுதல் வேலைகளை செய்யலாம்.

நெல் நாற்று நட்ட 20 மற்றும் 40ம் நாட்களில் இருமுறை பஞ்சகவ்யம் அல்லது ஜீவாம்ருதம் தெளிக்கிறார் விவசாயி. பயிர் வளர்ச்சி குறைவாக இருந்தால் மட்டும் பயிர் ஊக்கியாக தேபோர் கரைசலை தெளிப்பதுண்டு. இது தவிர, முன் தடுப்பாக பூச்சி விரட்டி பயன்படுத்த வேண்டும். எருக்கு, ஆவாரை, அரளி, துத்தி, நொச்சி, பப்பாளி போன்றவற்றால் தலா 2 கிலோ வீதம் துண்டுகளாக நறுக்கி 10 லிட்டர் பசு கோமியத்தில் ஊறப்போட்டு ஒரு பிளாஸ்டிக் வாளியில் இட்டு, வெயில் படாமல் வைக்க வேண்டும். 7வது நாள் நன்கு வடிகட்டி 1 லிட்டர் கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளித்தார். மேலும் விபரங்களுக்கு கோமதி நாயகம், 18, உச்சி மாகாளியம்மன் வீதி, புளியங்குடி, திருநெல்வேலி மாவட்டம். தொலைபேசி : 0463 - 623 3235.

**பறவைகள் அங்கக வேளாண்மைக்கு ஓர் உற்ற துணை:** ஏறக்குறைய 60 வகையான நீர்பறவைகள் இந்திய துணைக்கண்டத்தில் உள்ள நெல் வயல்களில் கணக்கெடுக்கப் பட்டுள்ளது. இப்பறவைகள் நெற்பயிரைத்

தாக்கி அழிக்கும் பூச்சிகளை பெருமளவு உணவாக உட்கொள்கின்றன. புளுமட்டிஸ் என்னும் பறவை ஓராண்டில் சுமார் 5000 இனம் புழுக்களையும், 5 இலட்சம் இலைக் கொசுக்களையும் உணவாக உட்கொள்கின்றது. பறவைகளின் எச்சத்தில் அதிக அளவில் தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்கள் உள்ளன.

எனவே பறவைகளின் எச்சங்களை அங்கக உரமாகப் பயன்படுத்தி வேளாண்மை செய்வதால் அங்கக விவசாயிகள் பயனடைவர். விவசாயிகள் பறவைகள் கூடும் மரங்களை பாதுகாத்திட வேண்டும். பறவைகளைப் பாதுகாப்பதில் பயிர் சத்துடன் பூச்சித் தொல்லையும் குறைப்பதற்கு வழி வகுக்கும். தகவல் : ம.மகேந்திரன், சலீம்அலி, பறவை மற்றும் இயற்கை வரலாற்று மையம், கோயம்புத்தூர் - 641 108.
**திருந்திய நெல் சாகுபடியில் கடைபிடிக்க வேண்டிய முக்கிய நுட்பங்கள்:** தரமான சான்று பெற்ற உயர் விளைச்சல் அல்லது வீரியஒட்டு இரகங்களை பயன்படுத்துதல். குறைந்த விதையளவு - 2 கிலோ ஒரு ஏக்கருக்கு. விதை நேர்த்தி செய்தல். ஒரு ஏக்கர் நடவு செய்ய ஒரு சென்ட் (40 சதுர மீட்டர்) சுருள்பாய் நாற்றங்கால். நடவு வயலை துல்லியமாக சமன் செய்தல். இளம் வயது (14 நாட்கள்) நாற்றுகளை பயன்படுத்துதல்.
மார்கர் கருவி மூலம் சதுர முறையில் அதிக இடைவெளியில் (22.5 X 22.5 செ.மீ) நடவு செய்தல். குத்துக்கு ஒரு நாற்றை பயன்படுத்துதல். களைக்கருவி (கோனோ வீடர்) மூலம் களை நிர்வாகம் மேற்கொள்ளுதல். காய்ச்சலும், பாய்ச்சலுமாக நீர் பாய்ச்சுதல். பச்சை வண்ண அட்டை மூலம் தழைச்சத்து உரமிடுதல். ஒருங்கிணைந்த பயிர்பாதுகாப்பு.
**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## பிந்தைய மானியம் பெற விண்ணப்பிக்க அறிவுரை

புதுச்சேரி : ஆடிப்பட்டத்தில் காய்கறிகள் பயிரிட்டத்திற்கான பிந்தைய மானியம் பெற விவசாயிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டுள்ளது.

கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக்கலை) விடுத்துள்ள செய்திக் குறிப்பு: வேளாண் துறை, கூடுதல் வேளாண் இயக்குநர் (தோட்டக் கலை) அலுவலகம் மூலம் 2015--16ம் ஆண்டு ஆடிப்பட்டத்தில் பயிரிடப்பட்ட காய்கறிகள், வாழை மற்றும் பூக்களின் சாகுபடி பிந்தைய மானியம் பெற விண்ணப்பங்கள் தோட்டக்கலை விவசாயிகளிடம் இருந்து வரவேற்கப்படுகிறது. விண்ணப்பங்கள் புதுச்சேரி தாவரவியல் பூங்கா, கூடுதல் வேளாண் இயக்குநர்(தோட்டக்கலை) அலுவலகத்தில்லுள்ள காய்கறி பிரிவில் பெற்று, பூர்த்தி செய்து வரும் 15ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். கடைசி தேதிக்கு பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## மணிலா விவசாயிகளுக்கு பண்ணை பள்ளி நிகழ்ச்சி

http://www.dinamalar.com/district_detail.asp?id=1332575

புதுச்சேரி : காலாப்பட்டு பண்ணை தகவல், விவசாயிகள் ஆலோசனை மையம் சார்பில் சஞ்சீவி நகரில், மணிலா பயிரிடும் விவசயி களுக்கு நிலக்கடலை உற்பத்தியை பெருக்க, புதிய தொழில் நுட்பங்கள் குறித்த பண்ணை பள்ளி நிகழ்ச்சி நடந்தது. நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டு முன்னோடியாக திகழும் சுப்பிரமணியன் கலந்து கொண்டு ஆலோசனைகள் மற்றும் நிலக்கடலை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய வழி முறைகள் குறித்து பேசினார்.இந்நிகழ்ச்சியின் துவக்கமாக காலாப்பட்டு உழவர் உதவியாக வேளாண் அலுவலர் அனுப்குமார் வரவேற்றார். கூடுதல் வேளாண் இயக்குநர் ரவிப்பிரகாசம் கலந்து கொண்டு ஆத்மா திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து பேசினார்.வேளாண் அலுவலர் திருநாதன்

ஒருங்கிணைந்த உர நிர்வாகம் பற்றியும், சாப்ஸ் நிறுவன நிறுவனர் அப்துல் காதர், சோலார் விளக்கு பொறி வைத்து பூச்சிகளை கட்டுப்படுத்துவது குறித்தும் விளக்கினர்.ஏற்பாடுகளை கிராம விரிவாக்க பணியாளர் பழனி மற்றும் மாதவன் ஆகியோர் செய்தனர்.

**இழுபறியாகும் பி.ஏ.பி., தண்ணீர் திறப்பால்.... வறட்சியால் கருகும் தென்னை மரங்கள்**




உடுமலை: உடுமலைப்பகுதியில், பருவமழை பெய்யாமல், வறட்சி துவங்கியுள்ள நிலையில், பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறப்பதும் காலதாமதமாகி

வருவதால், விவசாயிகள் பரிதாப நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். குளங்கள் வறண்டு, நிலத்தடி நீர் மட்டமும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

உடுமலை சுற்றுப்பகுதியில், வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழையே நிலத்தடி நீர் மட்டத்தை தீர்மானிக்கின்றன. கடந்த சில ஆண்டுகளாக, பருவமழை பொழிவு குறைவு காரணமாக, இப்பகுதியில், வறட்சி நிலவுகிறது.

நீண்ட கால பயிரான தென்னை மரங்கள் முற்றிலுமாக கருகி, விவசாயிகள் மாற்றுத்தொழிலுக்கு செல்வதை தவிர்க்க, பி.ஏ.பி., பாசனத்திட்டம் மட்டுமே கைகொடுத்து வருகிறது. பி.ஏ.பி., திட்டத்தில், நான்கு மண்டலங்களாக பிரித்து பாசனத்திற்கு திருமூர்த்தி அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, நான்கு சுற்றுகளில், ஏக்கருக்கு சில மணி நேரம் மட்டும் கிடைக்கும் தண்ணீரே உடுமலை பகுதியில், ஆயிரக்கணக்கான ஏக்கர் தென்னை சாகுபடியை காப்பாற்றி வருகிறது.

இந்தாண்டு, அதற்கும் வாய்ப்பில்லாமல், பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசனத்திற்கு அணையிலிருந்து தண்ணீர் திறப்பது இழுபறியாக உள்ளது. வழக்கமாக, ஆடிப்பட்டம் எனப்படும் சாகுபடி சீசனுக்கு, ஆக., மாதத்தில், திருமூர்த்தி அணையிலிருந்து சுழற்சி முறையில், மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்படும்.

தற்போது, நான்காம் மண்டல பாசனத்திற்கு காண்டூர் கால்வாய் புதுப்பிப்பு பணிகள் தாமதம் உட்பட காரணங்களால், இதுவரை தொகுப்பு அணைகளிலிருந்து கூட திருமூர்த்தி அணைக்கு தண்ணீர் எடுக்கப்படவில்லை. காண்டூர் வழியாக தொகுப்பு அணைகளிலிருந்து தண்ணீர் எடுத்து, திருமூர்த்தி அணையில் இருப்பு வைத்து, தண்ணீர் திறக்க இம்மாத இறுதியாகும் நிலை உள்ளது. இதனால், வறட்சியில்

சிக்கித்தவிக்கும், உடுமலை, தாராபுரம், காங்கேயம் உட்பட பகுதிகளில், தென்னை மரங்கள் தண்ணீரின்றி கருகும் அபாயம் உள்ளது.

**வறட்சியின் பிடியில் குளங்கள்**

உடுமலை பகுதி கிராமங்களில் நிலத்தடி நீர் மட்டத்திற்கு உதவியாக இருக்கும் குளங்கள், தண்ணீரின்றி வறண்டுள்ளன. மழையால், குளங்கள் நிரம்புவது கானல்நீராகியுள்ளதால், வறட்சியை சமாளிக்க, வாய்க்கால்கள் மூலம் குளங்களுக்கு தண்ணீர் நிரப்பப்படுகிறது. நான்காம் மண்டல பாசனம் தாமதம் ஆவதால், கால்நடைகளுக்கு கூட தண்ணீர் இல்லாமல், ஏழு குள பாசன குளங்கள் உட்பட அனைத்து குளங்களும் வறண்டு காணப்படுகின்றன.

## அணைகள் நீர்மட்டம் முழுஅளவை எட்ட... பருவமழை தொடர விவசாயிகள் எதிர்பார்ப்பு

பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதிகளில், எதிர்பார்த்த அளவு பருவ மழை பெய்யாததால், இந்தாண்டு அணைகள் நிரம்புமா? என்பது கேள்விக்குறியாகியுள்ளது. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே உள்ள ஆழியாறு அணை, பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின் கீழ் முக்கிய அணையாக உள்ளது. இந்த அணையில், சேகரிக்கப்படும் தண்ணீர் பழைய ஆயக்கட்டு, புதிய ஆயக்கட்டு, கேரள நீர் பாசனத்திற்கும் வழங்கப் படுகிறது. இது தவிர, குடிநீர் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

பழைய ஆயக்கட்டில், 6 ஆயிரத்து 400 ஏக்கர் நிலங்களும்; புதிய ஆயக்கட்டில், 42 ஆயிரம் ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறுகின்றன.

பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு, ஆழியாறு ஆறு மூலமாகவும்; புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வேட்டைக்காரன்புதுார் கால்வாய் வழியாகவும் தண்ணீர் வழங்கப்படுகிறது.

இந்நிலையில், பாசனம் மற்றும் குடிநீருக்கு தண்ணீர் திறப்பு மற்றும் நீர் வரத்து குறைவு போன்ற காரணங்களினால் அணை நீர்மட்டம், 105 அடிக்கு குறைந்தது. இந்நிலையில், கடந்த மாதம் பெய்த மழையால் அணை நீர்மட்டம் உயர்ந்தது. எனினும் எதிர்பார்த்த அளவு பெய்யாததால், அணைகள் இந்தாண்டு நிரம்புமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது.கடந்தாண்டு பருவமழை கை கொடுத்ததால், ஆழியாறு அணை நீர்மட்டம் கொள்ளளவை எட்டியது. தொடர்ந்து, இரண்டு மாதங்கள் நிரம்பிய நிலையிலேயே, அணை காட்சியளித்தது. இந்நிலையில், இந்தாண்டு பருவமழை கை கொடுக்காததால், அணை நிரம்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாட்களாக, 116 அடியாகவே அணை நீர்மட்டம் உள்ளது. நேற்றைய நிலவரப்படி, ஆழியாறு அணையின் மொத்த கொள்ளளவான 120 அடியில், தற்போது, 116.50 அடியாக இருந்தது.

அணைக்கு வினாடிக்கு 282 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. குடிநீர் மற்றும் பாசனத்திற்காக 363 கன அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது.

## இயற்கை பசுந்தாள் உர விதைகளுக்கு பதிலாக மானியம் ரூ.800, 6,323 ஏக்கருக்கு வழங்க வேளாண் துறை முடிவு

வாலாஜாபாத்: இயற்கை பசுந்தாள் உர விதைகளுக்கு பதிலாக, நடப்பாண்டில் இருந்து, விதைப்பு மானியமாக, ஒரு ஏக்கருக்கு, 800 ரூபாய் வழங்க, வேளாண் துறை முடிவு செய்து உள்ளது. இதற்காக, மாவட்டம் முழுவதும், 6,323 ஏக்கருக்கு மானியம் வழங்க, 50.58 லட்சம்

ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. கடந்த 30 ஆண்டுகளுக்கு முன், காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் ஒன்றாக இருந்தபோது, 4.5 லட்சம் ஏக்கரில், விவசாயிகள் நெல் பயிரிட்டு வந்தனர்.

**இயற்கை உர ஊக்குவிப்பு**

அப்போது, அதிக அளவில், இயற்கை உரங்களின் பயன்பாடு நடைமுறையில் இருந்து வந்தது.

தற்போது, ரசாயன உரங்களின் வரத்து அதிகரிப்பால், தழைச் சத்து கொடுக்கும் இயற்கை உரங்களை வயலில் இடும் வழக்கம் குறைந்து விட்டது. மேலும், நடவு காலம் முதல் அறுவடை காலம் வரை, ரசாயன உரங்களையே விவசாயிகள் பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது.

தற்போது, ரசாயன உரங்களின் பயன்பாட்டை குறைத்து, இயற்கை உரங்களை ஊக்குவிப்பதற்கு வேளாண் துறை திட்டமிட்டு உள்ளது. இதற்காக, பசுந்தாள் உர விதைகளான சணப்பு மற்றும் தக்கைப்பூண்டு ஆகிய தழைச்சத்து உரங்களை, தரிசு நிலங்களில் விதைக்க, இதுவரை வழங்கி வந்த பசுந்தாள் எரு விதைக்கு பதிலாக, ஒரு ஏக்கருக்கு 800 ரூபாயை மானியமாக வழங்க, முடிவு செய்து உள்ளது.

இந்த மானியத்தை பெற, அந்தந்த வட்டார வேளாண் உதவி அலுவலர்களிடம், பசுந்தாள் எரு விதைப்பு செய்த வயலின் புகைப்படம்; அரசுடைமை வங்கியில் உள்ள வங்கி கணக்கு எண் ஆகியவற்றை சமர்ப்பித்தால், மானியம் வழங்கப்படும் என, அறிவிக்கப்பட்டு உள்ளது.

நிபந்தனைகள்

மானியம் பெற விண்ணப்பிக்கும் விவசாயி, கடந்த ஆண்டு மானியத்தில் வழங்கப்பட்ட பசுந்தாள் உர விதைகளை பெற்றிருக்கக் கூடாது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் விவசாயிக்கு, கட்டாயமாக வங்கி கணக்கு இருக்க வேண்டும்.

வேளாண் உதவி அலுவலர் பரிந்துரையுடன், வயலின் புகைப்படத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

இதுகுறித்து, வேளாண் துறை இணை இயக்குனர் சீதாராமன் கூறியதாவது: கடந்த ஆண்டு வரை, பசுந்தாள் உர விதைகளை வேளாண் துறை, மானியத்தில் வழங்கி வந்தது. நடப்பு ஆண்டில் இருந்து, விதை வழங்குவதை தவிர்த்து, ஏக்கருக்கு, 800 ரூபாயை விதைப்பு மானியமாக வழங்க, முடிவு செய்து உள்ளது.

இதற்காக, மாவட்டம் முழுவதும், 6,323 ஏக்கருக்கு மானியம் வழங்க , 50.58 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இந்த நிதியை, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்களுக்கு அனுப்பி, விதைப்பு செய்யப்படும் சாகுபடிக்கு ஏற்றவாறு பகிர்ந்தளிக்கப்படும்.

இவ்வாறு, அவர் கூறினார்.

## கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

உத்திரமேரூர்: உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட 10 கிராமங்களில், நேற்று கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

கால்நடைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தொற்று நோயான கோமாரி நோயை கட்டுப்படுத்த, கால்நடை பராமரிப்பு துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. அதன்படி, காஞ்சிபுரம் மாவட்டத்தில், 4 லட்சத்து 39 ஆயிரத்து 190 கால்நடைகளுக்கு, ஒன்பது சுற்றுகளாக தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதன் ஒரு பகுதியாக, உத்திரமேரூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட திருமுக்கூடல், அரும்புலியூர், கடல்மங்கலம், சின்னமாங்குளம், களியாம்பூண்டி, வயலூர், சாலவாக்கம், ஒழையூர், நெய்யாடுபாக்கம்,

ஒழுகரை ஆகிய 10 கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு, அந்தந்த பகுதி கால்நடை மருந்தக மருத்துவர்கள் மூலம், நேற்று கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. வருகிற 21ம் தேதி வரை குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட நாட்களுக்கு, தொடர்ந்து கால்நடைகளுக்கு இத்தடுப்பூசி போடப்பட உள்ளது.

### கோமாரி நோய் தடுப்பு முகாம்

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தும் முகாம் நேற்று முதல் துவங்கியது.

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம், இம்மாதம் 21ம் தேதி வரை நடைபெற உள்ளது.

மாவட்டத்தில் இதுவரை எட்டு சுற்றுகள் நடைபெற்றுள்ள நிலையில், தற்போது ஒன்பதாவது சுற்றாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தும் முகாம் நடைபெற உள்ளது.

இம்முகாமின் துவக்க நிகழ்ச்சி, பூண்டி ஒன்றியம் நெய்வேலி கிராமத்தில் நேற்று நடந்தது. இதில் கால்நடை துறையினர் கலந்துகொண்டு, 100க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி செலுத்தினர். வரும், 21ம் தேதி நடைபெறவுள்ள இம்முகாமில், பொதுமக்கள் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி செலுத்துமாறு, மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டு உள்ளது.

### திருவெண்ணெய்நல்லூரில் கால்நடை மருத்துவ முகாம்

திருவெண்ணெய்நல்லூர் : திருவெண்ணெய்நல்லூரில் கால்நடைகள் மருத்துவ முகாம் நடந்தது.

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த காந்திக்குப்பத்தில் கால்நடைகள் மருத்துவ பரிசோதனை முகாம் நடந்தது. பேரூராட்சி தலைவர்

வெற்றிவேலன், முகாமை துவக்கி வைத்தார். இதில், டாக்டர் ராஜேஷ், உதவியாளர் சையத் ஆசாத் உள்ளிட்ட குழுவினர், 250 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். இதேப்போல் ஆனத்தூரில் நடந்த முகாமில், டாக்டர் ரதி தலைமையிலான குழுவினர் கலந்து கொண்டு, 300 கால்நடைகளுக்கும், இருவேல்பட்டில் நடந்த முகாமில், டாக்டர் தியாகீஸ்வரன் தலைமையிலான குழுவினர், 300 கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட்டனர்.

## இயற்கை வழி வேளாண்மை பூட்டை கிராமத்தில் பயிற்சி

சங்கராபுரம் : சங்கராபுரம் அடுத்த பூட்டை கிராமத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி முகாம் நடந்தது.

சங்கராபுரம் ஒன்றியம், பூட்டை கிராமத்தை இயற்கை வழி வேளாண்மை கிராமமாக, தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ் தேர்வு செய்துள்ளனர். இங்குள்ள 60 விவசாயிகளுக்கு ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது.பூட்டை கிராம சமுதாய நல கூடத்தில் நடந்த பயிற்சி முகாமிற்கு, மாவட்ட வேளாண்மை உதவி இயக்குநர் ரத்தினசபாபதி தலைமை தாங்கினார். பூட்டை ஊராட்சி தலைவர் கந்தசாமி, கூட்டுறவு வங்கி தலைவர் கோவிந்தராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.வேளாண்மை உதவி இயக்குனர் சண்முகம், முகாமை துவக்கி வைத்தார். பிரபாகரன், விதைசான்று அலுவலர் சுந்தரம், வேளாண்மை அலுவலர்கள் சதீஷ்குமார், அப்துல்காதர் ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினர். பயிற்சி ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் பழனிவேல், மைக்கேல், நாசர், அப்பாஸ், செந்தில்குமார் ஆகியோர் செய்திருந்தனர்.சங்கராபுரம் வேளாண் அலுவலர் விஜயகுமார் நன்றி கூறினார்.

## இயந்திரம் மூலம் நெல் விதைப்பு; ஆலங்குப்பத்தில் செயல்விளக்கம்




முருக்கேரி : முருக்கேரி அடுத்த ஆலங்குப்பம் கிராமத்தில், இயந்திரம் மூலம் நெல் விதைப்பு பணி செய்வது குறித்து செயல்விளக்க முகாம் நடந்தது.

முகாமிற்கு ஊராட்சி தலைவர் ராமலிங்கம் முன்னிலை வகித்தார். வடகோட்டிப்பாக்கம் ஊராட்சி தலைவர் சிவகுமார் வரவேற்றார். முகாமில் வேளாண்மை துறை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் தலைமை தாங்கி பேசியதாவது : விவசாயிகள் நவீன தொழில்நுட்பங்கள், இயந்திரம் மற்றும் புதிய நெல் ரகங்கள் மூலம் விவசாயம் செய்தால், ஏக்கருக்கு 4 ஆயிரம் கிலோ நெல் மகசூல் பெறலாம். இயந்திரம் மூலம் நடவு செய்வதால் 20 கிலோ நெல் விதை போதும். இதனால் மகசூல் அதிகரிக்கும்.இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு அரசு சார்பில், ஏக்கருக்கு 3,000 ரூபாய் மான்யம் வழங்கப்படுகிறது. விவசாயிகள் மான்யத்தை பெற சிட்டா, அடங்கல், இயந்திர நடவு புகைப்படம், வங்கி கணக்கு எண், ஆதார் எண் மற்றும் ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு ஆகிய விபரங்களை வேளாண்மை விரிவாக்க மையங்களில் கொடுத்து பயன்பெறலாம்.இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார் கூறினார்.வேளாண்மை அலுவலர் எத்திராஜ், வட்டார தொழில்நுட்ப மேலாளர் செந்தில்குமார், உதவி

வேளாண்மை அலுவலர்கள் மோகன்குமார், விஜயலட்சுமி, யமுனா,சுரேஷ், மஞ்சு, தொழில்நுட்ப வல்லுநர்கள் கோவிந்தசாமி, வீராசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மேட்டூர் அணை நீர் இருப்பு: 4 நாளில் 3 டி.எம்.சி., சரிவு

மேட்டூர்: நீர்திறப்பு அதிகரித்த நிலையில், வரத்து குறைந்ததால் மேட்டூர் அணை நீர் இருப்பு, கடந்த, 4 நாளில், 3 டி.எம்.சி., சரிந்தது. மேட்டூர் அணை நீர்மட்டம் கடந்த மாதம், 28ம் தேதி, 93.560 அடியாகவும், நீர் இருப்பு, 56.958 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கர்நாடகா அணைகளின் நீர்திறப்பு குறைந்ததால், நேற்று மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு, 6,372 கனஅடியாக சரிந்தது. அதேநேரம் அணையில் இருந்து வினாடிக்கு, 16,800 கனஅடி நீர் பாசனத்துக்கு வெளியேற்றுவதால் நாள் ஒன்றுக்கு, 1 டி.எம்.சி., வீதம் நீர் இருப்பு சரிகிறது. இதனால், நேற்று நீர்மட்டம், 90.890 அடியாகவும், நீர் இருப்பு, 59.674 டி.எம்.சி.,யாகவும் சரிந்தது. கடந்த, 4 நாளில் நீர்மட்டம், 3 அடி, நீர் இருப்பு, 3 டி.எம்.சி., சரிந்துள்ளது.

## மாவட்டத்தில் 3.53 லட்சம் கால்நடைக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்கம்

நாமக்கல்: மாவட்டத்தில், 3.53 லட்சம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை, நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி துவக்கி வைத்தார்.

நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், நாமக்கல் அடுத்த எர்ணாபுரம் கால்நடை மருத்துவமனை மூலம், மாரப்பநாயக்கன்பட்டி கிராமத்தில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

துவக்க விழா நடந்தது. நாமக்கல் கலெக்டர் தட்சிணாமூர்த்தி, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாமை துவக்கி வைத்து பேசியதாவது: நாமக்கல் மாவட்டத்தில், இன்று (நேற்று) துவங்கி, 21 நாட்களுக்கு, கால்நடைகளுக்கான, 9வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. மாவட்டத்தில் மொத்தம் உள்ள, 3.53 லட்சம் கால்நடைகளுக்கு, 100 சதவீதம் முழுமையாக தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிக்காக, மாவட்டம் முழுவதும், கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்களை கொண்டு, 111 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டு, அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரில் சென்று, அந்தந்த கிராமங்களிலேயே தடுப்பூசிப்பணிகள் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளர்ப்போர், மூன்று மாதத்துக்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது, எருமை ஆகிய கால்நடைகளை, அந்தந்த பகுதிகளில் நடக்கும் முகாமில் அழைத்துச் சென்று கோமாரி நோய் தடுப்பூசி தவ றாமல் போட்டுக் கொள்ள வேண்டும். இவ்வாறு, அவர் கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் சக்திவேல், ஆவின் நிறுவன உதவிப் பொதுமேலாளர் முருகுசெல்வன், உதவி இயக்குனர்கள், அலுவலர்கள், டாக்டர்கள் உள்பட பலர் பங்கேற்றனர்.

### செப்., 7ல் தீவனப்பயிர் சாகுபடி: விதை உற்பத்தி குறித்த பயிற்சி

நாமக்கல்: "வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 7ம் தேதி, தீவனப்பயிர் சாகுபடி, விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி வகுப்பு நடக்கிறது' என, ஒருங்கிணைப்பாளர் டாக்டர் மோகன் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 7ம் தேதி, காலை, 9 மணிக்கு, தீவனப்பயிர் சாகுபடி மற்றும் விதை உற்பத்தி தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பில், ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இப்பயிற்சி முகாமில், கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு உகந்த தீவனப்பயிர் வகைகள், மண்ணின் தன்மைக்கேற்ற தீவனப்பயிர்கள், குறிப்பாக, மானாவாரி மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தானிய, பயறுவகை, புல்வகை மற்றும் மரவகைத் தீவனப்பயிர்கள் சாகுபடி குறித்து விளக்கப்படுகிறது. மேலும், அதில் உள்ள சத்துக்கள், புதிய ரகங்கள், விதை நேர்த்தி செய்யும் முறைகள், விதை அளவு, பயிர் இடைவெளி, விதைப்பு செய்தல், உரமிடுதல், சொட்டுநீர், தெளிப்புநீர் பாசனம் செய்தல், பல்வேறு தீவனப்பயிர்களில் விதை உற்பத்தி செய்யும் முறைகள், விதை சுத்திகரிப்பு, விதை சான்று பெறும் வழிமுறைகள் மற்றும் மரவகை தீவனப்பயிர்களில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்படும். அதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்கலாம். விருப்பமுள்ளவர்கள், நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும், 6ம் தேதிக்குள், தங்கள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்ணை கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும். இவ்வாறு, அதில் கூறப்பட்டுள்ளது.

## ரூ.51 லட்சத்துக்கு மஞ்சள் வர்த்தகம்

ராசிபுரம்: நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று நடந்த ஏலத்தில், 1,055 மூட்டை மஞ்சள், 51 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ராசிபுரம் அடுத்த, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் செவ்வாய்கிழமை மஞ்சள் ஏலம் நடக்கிறது. இந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள், மஞ்சளை அறுவடை செய்து ஏலத்திற்கு கொண்டு வருகின்றனர். அவ்வாறு, கொண்டு வரும் மஞ்சளை, பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் வியாபாரிகள் ஏலம் எடுத்து விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். நேற்று நடந்த ஏலத்தில், தலா, 65 கிலோ கொண்ட, 1,055 மூட்டைகள் குவிக்கப்பட்டது. அதில், விரலி ரகம் மூட்டைக்கு அதிக பட்சம், 9,290க்கும், குறைந்த பட்சம், 7,499 ரூபாய்க்கும், உருண்டை ரகம் மூட்டைக்கு, அதிக பட்சம், 7,869க்கும், குறைந்த பட்சம், 6,499 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதேபோல், பனங்காலி ரகம் மூட்டைக்கு அதிக பட்சம், 11 ஆயிரத்து, 9க்கும், குறைந்த பட்சம், 7,409 ரூபாய்க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில், 1,055 மூட்டை மஞ்சள், 51 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம்: மாவட்டத்தில் 110 குழு அமைப்பு

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் நேற்று துவங்கியது. இப்பணியை மேற்கொள்ள, 110 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அடுத்த, கள்ளியூர் கிராமத்தில், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம், நேற்று துவங்கியது. அப்போது, கலெக்டர் ராஜேஷ் கூறியதாவது:

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், மொத்தம், மூன்று லட்சத்து, 65 ஆயிரம் பசு மற்றும் எருமை இனங்கள் உள்ளன. இவற்றில், 90 சதவீதம் உயர்ரக கலப்பின பசுக்களாகும். இவை மூலம், நாள்தோறும், ஏழு லட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்படுகிறது. எனவே, கால்நடைகளை நோய் தாக்குதலில் இருந்து காக்கும் பொருட்டு, அரசின் நிதி உதவியோடு, கோமாரி நோய் தடுப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும், இருமுறை மாவட்டத்திலுள்ள அனைத்து பசு மற்றும் எருமை இனங்களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி இலவசமாக வழங்கப்படுகிறது. மாவட்டம் முழுவதும் இதுவரை, எட்டு சுற்றுகளாக தடுப்பூசி போடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இன்று (நேற்று), 9வது சுற்று தடுப்பூசி முகாம் துவங்கியுள்ளது. இப்பணிகள் தொடர்ச்சியாக, 21 நாட்களுக்கு நடக்கும். எனவே, பசு மற்றும் எருமை இனங்கள் வைத்திருக்கும் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள், 100 சதவீதம் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும். இப்பணியை மேற்கொள்ள, கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர் மற்றும் கால்நடை பராமரிப்பு உதவியாளர் அடங்கிய, 110 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வை பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் மற்றும் தண்டோரா மூலம் அறிவிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு, அவர் கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் தேவராஜன், துணை இயக்குனர் டாக்டர் வேடியப்பன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கால்வாய் அமைக்க ரூ. 2.42 கோடி: சின்னாறு அணை நிரம்ப வாய்ப்பு

ஓசூர்: "ஓசூரை அடுத்த, சூளகிரி துரை ஏரிக்கு தென்பெண்ணை ஆற்றில் இருந்து தண்ணீர் வர வசதியாக, இரண்டு கோடியே, 42 லட்சம் ரூபாய் மதிப்பில், கால்வாய் அமைக்க நிதி ஒதுக்கீடு செய்யப்படும்' என, அறிவிக்கப்பட்டதால், சின்னாறு அணை நிரம்பும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஓசூரை அடுத்த, சூளகிரி அருகே, சின்னாறு அணை கட்டப்பட்டது. இந்த அணை, பேரிகை, அத்திமுகம், செட்டிப்பள்ளி, புளியரசி, பீளாளம், அன்னசந்திரம், தொட்டி, மாரண்டப்பள்ளி உள்பட பல்வேறு பகுதிகளில் பெய்யும் மழைநீர் மற்றும் துரை ஏரியில் இருந்து வரும் தண்ணீர் மூலம் நிரம்பி வந்தது. ஆனால், கடந்த பல ஆண்டுகளாக சின்னாறு அணையில் நீர்பிடிப்பு பகுதிகளில் போதிய மழை பெய்யாததால், அணையின் நீர்வரத்து பாதிக்கப்பட்டு, தற்போது குட்டை போல் காட்சியளிக்கிறது. இந்த அணை நிரம்பும் பட்சத்தில், சூளகிரி, யோகிபுரம், காமநாயக்கன்பேட்டை, மைதாண்டப்பள்ளி, கிருஷ்ணேப்பள்ளி, தீரணப்பள்ளி, சென்னப்பள்ளி மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகள் பாசன வசதி பெறும். ஆனால், கடந்த, 15 ஆண்டுக்கும் மேலாக சின்னாறு அணை நிரம்பாததால், 2,000 ஏக்கர் விவசாய நிலங்கள் தரிசு நிலங்களாக மாறும் அபாயம் ஏற்பட்டது. கெலவரப்பள்ளி அணையில் இருந்து, தென்பெண்ணை ஆற்றில் திறந்து விடப்படும் தண்ணீர், மருதாண்டப்பள்ளி வரை வருகிறது.

இப்பகுதிக்கு, ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள துரை ஏரிக்கு, தண்ணீர் வர கால்வாய் வசதி இல்லை. மருதாண்டப்பள்ளியில் இருந்து, துரை ஏரி வரை புதிய கால்வாய் அமைக்கப்படும் பட்சத்தில், சின்னாறு அணை நிரம்பும் என விவசாயிகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த கோரிக்கையை நிறைவேற்றக்கோரி மாவட்ட நிர்வாகம், அமைச்சர்,

பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம், பல்வேறு கோரிக்கை மனுக்கள் கொடுக்கப்பட்டது.

இந்நிலையில், முதல்வர் ஜெயலலிதா, மருதாண்டப்பள்ளியில் இருந்து துரை ஏரி வரை கால்வாய் அமைக்க, இரண்டு கோடியே, 42 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என, சட்டசபையில் அறிவித்துள்ளார். இதன் மூலம், மருதாண்டப்பள்ளியில் இருந்து துரை ஏரி வரை கால்வாய் அமைத்து, கெலவரப்பள்ளி அணையில் இருந்து திறந்து விடப்படும் உபரி நீர் துரை ஏரி வரை வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. துரை ஏரி ஆண்டுதோறும் நிரம்பும் பட்சத்தில், சின்னாறு அணை நிரம்ப வாய்ப்புள்ளதால், 2,000 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்கம்: கோபி கோட்டத்தில் 2.40 லட்சம் இலக்கு

கோபி: கோபி கோட்டத்துக்கு உட்பட்ட கிராமங்களில், கால்நடை பராமரிப்பு துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம், நேற்று துவங்கி, 2.40 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்பில், கோமாரி நோய், விவசாயிகளுக்கு பெரும் சவாலாக உள்ளது. பொதுவாக, மழைக்காலம் துவங்கினால், கால்நடைகளுக்கு வாய் கோமாரி நோய் தாக்கம் (எஃப்.எம்.டி.,) அதிகரிக்கும். கலப்பின மாடுகளை, கால் மற்றும் வாய் கோமாரி நோய் அதிகம் தாக்கி, கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும். இந்நோயால், கறவை மாட்டில் பால் உற்பத்தி குறையும். சினை பிடிப்பு தடைபடும். எருதுகளின் வேலைத்திறன் குறையும். இளங்கன்றுகளின் இறப்பு சதவீதம் உயரும். பருவநிலை மாற்றத்தால், கறவை மாடுகளுக்கு, கோமாரி நோய்

தாக்காமல் இருக்க, கால்நடை பராமரிப்பு துறை சார்பில், மாவட்டம் வாரியாக லட்சக்கணக்கில் தடுப்பூசி அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, ஈரோடு மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தடுப்பூசி மருந்துகள், நோய் புலனாய்வு பிரிவில் உள்ள குளிரூட்டியில் வைத்து, அனைத்து கால்நடை மருத்துவமனைகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. பஞ்., வாரியாக, நேற்று முதல் கோமாரி நோய் தடுப்பு முகாம் துவங்கி, 21 நாட்களுக்கு தடுப்பூசிகள் போடப்படுகிறது. அதன்படி, கோபி கோட்டத்துக்கு உட்பட்ட, கோபி, அந்தியூர், பவானி, சத்தி தாலுகாவில், ஒன்பது யூனியனுக்கு உட்பட்ட பகுதியில், இரண்டு லட்சத்து, 40 ஆயிரத்து, 300 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நான்கு தாலுகாவில் மொத்தம், 76 குழுவினர், கால்நடைகளுக்கு தடுப்பூசி போட முடுக்கிவிடப்பட்டுள்ளனர். கோபி அருகே நஞ்சகவுண்டம்பாளையம் கால்நடை மருத்துவமனையில், கோமாரி நோய் தடுப்புசி முகாம் நேற்று முதல் துவங்கியது. கோபி கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் மணிசேகரன் தலைமையில், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது. கடம்பூர், தாளவாடி, தலமலை, திம்பம், சிமட்டஹள்ளி ஆகிய மலைக்கிராமங்களில், 5ம் தேதி வரை, 50 குழுக்கள் முடுக்கி விடப்பட்டுள்ளனர். கோபி கோட்டத்துக்கு உட்பட்ட விவசாயிகள், தங்கள் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கத்தில் இருந்து தற்காத்து கொள்ள, இந்த முகாமை பயன்படுத்தி கொள்ள, உதவி இயக்குனர் மணிசேகரன் கேட்டு கொண்டார்.

## சம்பா பருவத்துக்கு விதை தயார்: வேளாண் உதவி இயக்குனர் தகவல்

கோபி: சம்பா பருவத்துக்கு ஏற்ற சான்று விதை இருப்பு உள்ளதாக, நம்பியூர் வேளாண் உதவி இயக்குனர் ஆசைதம்பி தெரிவித்துள்ளார்.

மேலும், அவர் கூறியதாவது: தற்போது சம்பா பருவம் துவங்கி உள்ளது. கிணற்று பாசனத்துக்கும், கீழ்பவானி பாசன பகுதிகளுக்கும் ஏற்ற, அரசு சான்று பெற்ற பல்வேறு நெல் ரகங்களை, குருமந்தூர் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத்துள்ளோம். ஏ.டி.டி., 38 ரகம் - 4,500 கிலோ, கோ., 43 ரகம் - 1,000 கிலோ இருப்புள்ளது. சம்பா மற்றும் பின் சம்பா பருவத்துக்கு ஏற்ற கோ.ஆர்., 50 என்ற புதிய நெல் ரகம் நம்பியர் வட்டாரத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது, 135 முதல், 140 நாள் சாகுபடியாகும். இந்த ரகம், வேளாண் பல்கலைக்கழகத்தால், 2010ல் வெளியிடப்பட்டது. கடந்த ஆண்டு விதைப்பண்ணை அமைத்து கொள்முதல் செய்யப்பட்டதில், ஏக்கருக்கு, மூன்றரை டன்களுக்கு அதிகமான மகசூல் கிடைத்தது. இதற்கு ஒரு கிலோவுக்கு, 10 ரூபாய் அரசு மானியம் வழங்குகிறது. கோ.ஆர்., 50 நெல், ஏழு டன், பி.பி.டி., 5204 ரகம், ஏழு டன் உள்ளன. கடந்தாண்டில், நெல் விதைகளை விதை நேர்த்தி செய்யாமல், நாற்றங்கால் அமைத்ததால், விதை மூலம் பல்வேறு நோய்களால், மகசூல் குறைந்து காணப்பட்டது. எனவே அனைத்து விவசாயிகளும், எல்லா ரகங்களுக்கும் விதை நேர்த்தி செய்து, தண்ணீரில் ஊற வைத்து, அதன்பின்பு நாற்றங்கால் அமைக்க வேண்டும். இதற்கு, ஒரு கிலோ நெல் விதைக்கு, இரண்டு கிராம் கார்பன்டாசிம் அல்லது டிரைசைக்ளோஜோல் மருந்து, இவற்றில் ஏதேனும் இரண்டை நன்கு கலந்து, ஒரு நாள் வைத்திருந்து, பின்பு நீரில் ஊற வைக்க வேண்டும், என்றார்.

## டெல்டா மாவட்ட பாசனத்துக்கு கல்லணையில் கூடுதல் நீர்திறப்பு

திருச்சி: டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி மேற்கொள்வதற்காக, கல்லணையில் இருந்து, கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.தமிழகத்தில், ஆண்டுதோறும் ஜூன், 12ம் தேதி

டெல்டா பாசனத்துக்காக, மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். டெல்டா மாவட்டங்களில் மட்டும், 12 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் பயிரிடப்படும். நடப்பாண்டு, மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இல்லாததால், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறக்கவில்லை. கடந்த ஜூலை மாதம், கர்நாடகா மாநிலத்தில் பெய்த மழையினால், காவிரியில் தண்ணீர் வந்து, மேட்டூர் அணை நீர்மட்டம், 90 அடியை எட்டியது. இதையடுத்து, தமிழக முதல்வர் உத்தரவின்படி, கடந்த, 9ம் தேதி டெல்டா பாசனத்துக்கு, தண்ணீர் திறக்கப்பட்டது. கரூர் மாயனூர் தடுப்பணை, திருச்சி முக்கொம்பு மற்றும் கம்பரசம்பேட்டை தடுப்பணையை கடந்த தண்ணீர், கடந்த மாதம், 12ம் தேதி இரவு, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கல்லணையை தொட்டது. இதையடுத்து, 13ம்தேதி காலை, 10 மணிக்கு, டெல்டா பாசனத்துக்கு, கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது. சம்பா சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டதால், திருச்சி மாவட்டத்தில் காவிரி பாசன பகுதி, கல்லணையை ஒட்டிய பகுதிகளில், நாற்று நடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். திருவளர்சோலை, மேல வெட்டி, உத்தமசீலி, கல்லணையை சுற்றிய பகுதிகளில் நடவு பணிகள் ஜரூராக நடந்து வருகிறது. தண்ணீர் திறப்பின் துவக்கத்தில், காவிரி, வெண்ணாறுகளில் அதிக தண்ணீர் திறக்கப்பட்டது. வெண்ணாற்றில், 6,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது. ஆனாலும், கடைமடை பகுதிகளுக்கு போதுமான தண்ணீர் சென்றடையவில்லை. அதனால், கடந்த மாதம், 29ம் தேதி, மேட்டூர் அணையில் இருந்து, வினாடிக்கு, 16 ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. அந்த தண்ணீர், நேற்று முன்தினம், தஞ்சை மாவட்டம், கல்லணையை வந்தடைந்தது. இதையடுத்து, கடைமடை பாசனத்துக்கு தண்ணீர் செல்லும் வகையில், கல்லணையில் இருந்து காவிரியில், வினாடிக்கு, 1,000 கனஅடியும், வெண்ணாற்றில், 8,000 கனஅடியும்

கல்லணை கால்வாயில், 2,219 கனஅடியும், கொள்ளிடத்தில், 1,501 கனஅடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது.

## மல்லிகை பூ விலை சரிவு: விவசாயிகள் கவலை

லாலாபேட்டை: மல்லிகை பூ விலை சரிவடைந்துள்ளதால், கிருஷ்ணராயபுரம் பகுதியில் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பகுதிகளான லாலாபேட்டை, வரகூர், தாளியம்பட்டி, செக்கணம், திருக்காம்புலியூர், புதுப்பட்டி போன்ற பகுதிகளில் மல்லிகை பூ சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த சில வாரங்களாக, முகூர்த்த சீஸன் காரணமாக, மல்லிகை பூ, கிலோ, 200 ரூபாய் முதல், 300 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. விளைச்சல் அதிகரிப்பு, விசேஷம் குறைவு காரணமாக, மல்லிகை பூ விலை கிலோ, 100 ரூபாய் வரை குறைந்தது. இதனால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## ரூ.150ஐ கடந்த உளுந்து, துவரம் விலை: ரேஷனில் பருப்பு தட்டுப்பாடு அபாயம்

கரூர்: தமிழகத்தில், பருப்பு விலை கிலோ, 150 ரூபாயை கடந்ததால், ரேஷனில் பருப்பு வாங்குவோரின் எண்ணிக்கை உயர துவங்கி உள்ளது. ரேஷனில், உளுந்து பருப்பு தட்டுப்பாடு உள்ள நிலையில், துவரம் பருப்பு தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.தமிழக பருப்பு மில்களுக்கு, தேவையான துவரம் பருப்பு, உளுந்து போன்ற மஹாராஷ்டிரா, குஜராத் போன்ற வடமாநிலங்களில் இருந்து, விற்பனைக்கு வருகிறது. வடமாநிலங்களில் இருந்து சேலம், விருதுநகர் போன்ற பருப்பு மொத்த மார்க்கெட் கடைக்கு தினமும், 300 லோடு வரை வரத்தாகிறது. கடந்த சில மாதங்களாக, வடமாநிலங்களில் இருந்து

பருப்பு வரத்து குறைய துவங்கியதால், பருப்பு விலை, கிலோவுக்கு, 125 முதல், 130 ரூபாய்க்கு விற்கப்பட்டவை, 140 ரூபாய் முதல், 145 ரூபாய்க்கு விற்கிறது. அதேபோல், 130 ரூபாய்க்கு விற்கப்பட்ட துவரம் பருப்பு ஒரு கிலோ, 150 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதன் காரணமாக ரேஷன் கடைகளில் பருப்பு வாங்குவோரின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

கரூர் மாவட்டத்தில், ஆகஸ்ட் மாதம், 220 டன் துவரம் பருப்பு, 120 டன் உளுந்து பருப்பு ரேஷன் கடைகளுக்கு சப்ளை செய்யப்பட்டது. அனைத்து பருப்புகளும் பொது மக்கள் வாங்கிச் சென்றுவிட்டனர். பருப்பு விலை தொடர்ந்து ஏறுமுகமாக இருப்பின், ரேஷன் கார்டுதாரர்கள் அதிகளவில் பருப்பு வாங்கும் நிலை உள்ளதால், ரேஷன் கடைகளில் பருப்பு தட்டுப்பாடு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

## புதிய தொழில் நுட்பத்தில் வெள்ளரி சாகுபடி



நத்தம்:நத்தம் பகுதியில் வீரிய ஒட்டு (ஜெர்கின்ஸ்) ரக வெள்ளரியை புதிய தொழில் நுட்ப முறையில் சாகுபடி செய்து அதிக மகசூல் பெறுகின்றனர்.

நத்தம் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த ஒத்தக்கடை, அய்யனார்புரம், மணக்காட்டூர், செந்துறை, மேற்கிபட்டி உள்ளிட்ட பகுதிகளில் வீரிய ஒட்டுரக வெள்ளரி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த வகை வெள்ளரி பதப்படுத்தப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. பெரும்பாலும் ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களே விதை, உரம் உள்ளிட்ட இடுபொருட்களை வழங்கி கொள்முத<லும் செய்கின்றன.

வெள்ளரி கொள்முதல் விலையில் இடுபொருட்களின் செலவை கழித்து விடுகின்றனர். ஆரம்பத்தில் இந்த வகை வெள்ளரி தரையில் கொடியாக படரவிட்டு சாகுபடி செய்யப்பட்டது. கீழே படரவிட்டு சாகுபடி செய்யும் முறையில் காய்களில் அழுகல் நோய் தாக்கம், இலைகளுக்குள் மறைந்து காய்கள் முற்றி வீணாகும் நிலை இருந்தது.

தற்போது வயலில் பாத்திகளின் அமைப்பிற்கு ஏற்றவாறு நீளவாக்கில் கம்பிகளை கட்டி பந்தல் போன்ற அமைப்பு ஏற்பத்தப்படுகிறது. முளைத்து வரும் பயிர்களின் நுனியை சிறு சணல்களை கொண்டு கம்பிகளில் தூக்கி கட்டவேண்டும். கொடி வளர, வளர கம்பியில் தூக்கி கட்டி வர வேண்டும்.

பயிர் செய்து 15 நாட்களில் காய்க்க துவங்கிவிடும். இதன் மூலம் பயிர்கள் நல்ல காற்றோட்டத்துடன் செழித்து அதிக காய்கள் பிடிக்கிறது. இலைகளுக்குள் மறையாமல் கண்களுக்கு தெரிகிறது. இதனால் காய்கள் தப்புவதற்கு வாய்ப்பு குறைவு. ஒத்தக்கடையை சேர்ந்த விவசாயி முருகன் கூறுகையில், ""இம்முறையில் அதிக பரப்பில் பயிர் சாகுபடி செய்யமுடிகிறது. காய்கள் பறிப்பதற்கும் எளிதாக உள்ளது. அதிக மகசூல் கிடைக்கிறது" என கூறினார்.

## 97 ஆயிரம் பசு, எருதுகளுக்கு கால், வாய்க்காணை தடுப்பூசி முகாம்

தேனி:தேனி மாவட்டத்தில் 97 ஆயிரம் பசு, எருதுகளுக்கு வாய்க்காணை தடுப்பு ஊசி போடும் முகாம் துவங்கியது.

மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை மண்டல இணை இயக்குனர் தனசேகர் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் 2013 ல் கால், வாய்க்காணை நோய் தாக்கம் ஏற்பட்டு கால்நடைகள் பாதிக்கப்பட்டன. இப்பாதிப்பு தேனி உள்ளிட்ட பல மாவட்டங்களில் ஏற்பட்டு பால் உற்பத்தி குறைந்து பொருளாதார ரீதியாக பாதிப்பு ஏற்பட்டது.

இந் நோய் கட்டுப்படுத்த தடுப்பூசிகள் போடபப்பட்டன.

இந்நோய் வரும்முன் காக்கும் வகையில் தேனி மாவட்டத்தில் கால், வாய்க்காணை நோய் தடுப்பூசி பணி நேற்று துவங்கியது. செப்டம்பர் 22 வரை நடைபெறுகிறது. மாவட்டத்தில் உள்ள 97,081 பசு, எருது, தொழு மாடுகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. விடுபட்ட கால்நடைகளுக்கு 22 முதல் 30 வரை தடுப்பூசி பணி மேற்கொள்ள உள்ளனர்.

தடுப்பூசி பணியில் 52 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் கால்நடை துறையின் 35 மருத்துவர்கள், 10 ஆவின் கால்நடை மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்கள் ஈடுபட உள்ளனர். ஒரு குழுவினர் நாள் ஒன்றுக்கு 150 கால்நடைகளுக்கு தடுப்பூசி பணி மேற்கொள்வர். தினமும் காலை 6 முதல் 9 மணிவரையும். மாலை 3 மணி முதல் மாலை 6 மணிவரை தடுப்பூசி பணிநடைபெறும்.

முகாமிற்கு தேவையான தடுப்பூசி மருந்துகள் 98 ஆயிரம் டோஸ்கள் வரவழைக்கப்பட்டுள்ளன. மருந்துகள் உரிய பாதுகாப்புடன் எடுத்து சென்று தடுப்பூசி பணி நடைபெறும். கால்நடை உள்ள வீடுகளை தேடிச்சென்று தடுப்பூசி பணி நடைபெறும், என்றார்.

## பால் உற்பத்தியை பெருக்க பஞ்சாப் சாகிவால் செட்டிநாடு கால்நடை பண்ணைக்கு புதிய வரத்து

காரைக்குடி: நாட்டு இன மாடு ரகத்தில் ஒருவகையான சாகிவால் பசுங் கன்றுகளை உற்பத்தி செய்ய, செட்டி நாடு கால்நடை பண்ணைக்கு கால்நடை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.50 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

பால் மற்றும் பால் பொருட்களின் தேவை அதிகரித்து வருவதால் கால் நடை வளர்ப்பில் பால் பண்ணை தொழிலுக்கு முக்கியத்துவம் உள்ளது. நாட்டு மாடுகள் மட்டுமே கோலோச்சி வந்த நிலையில், பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக, ஆஸ்திரேலியாவை சேர்ந்த ஜெர்சி, ஹாலந்தை சேர்ந்த ஹோல்ஸ்டீன் பிரிசியன், முர்ரா, சுர்த்தி உள்ளிட்ட பல்வேறு இனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இதனால் நாட்டு மாடுகள் அடிமாடாக சென்றது. நம் நாட்டு மாடுகளிலேயே அதிக பால் தரும் எண்ணற்ற ரகங்கள் இருந்தும், கால்நடை பண்ணைகளின் வழிகாட்டுதல் இல்லாமல், அவை குறித்த விபரம் பொதுமக்களுக்கு தெரியாமலேயே இருந்தது. தற்போது, பாலின் தரத்தையும், நோய் எதிர்ப்பு சக்தி உள்ள மாடுகளையும் கால்நடை துறையினர் தேடி வருகின்றனர். அதன் அடிப்படையில் காரைக்குடி செட்டிநாடு கால்நடை பண்ணையில் ராஜஸ்தானின் தார்பார்க்கர் இன மாடுகள் வளர்க்கப் பட்டு, உறைவிந்து மூலம் கருவூட்டப் பட்டு அதன் கன்றுகள் முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படுகிறது. அடுத்ததாக பஞ்சாப், அரியானா பகுதிகளில் காணப்படும் சாகிவால் இன கன்றுகளை உற்பத்தி செய்ய, ரூ.50 லட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது.

கால்நடை பண்ணை துணை இயக்குனர் மாசிலாமணி கூறும்போது: ஏற்கனவே 100 தார்பார்க்கர் இன பசுக்கள் எங்களிடம் உள்ளன. அடுத்த கட்டமாக 25 சாகிவால், 25 தார்பார்க்கர் இன பசுக்கள் இன்னும் ஒரு சில

வாரங்களில் வாங்கப்பட உள்ளன. அவை ஈனும் கன்றுகளை ஆறு மாதம் முதல் ஓராண்டு வரை பராமரித்து, முன்னுரிமை அடிப்படையில் விவசாயிகளுக்கு வழங்க உள்ளோம். சாகிவால் கிராம சூழலில் வளரக்கூடியது. நாள் ஒன்றுக்கு 15 முதல் 20 லிட்டர் பால் தரக்கூடியது. பெரிய மடி, சிவப்பு நிறம், கனமான குட்டை கொம்பு உடையது. இதற்கு குறைந்த அளவு தீவனம் அளித்தாலே போதும். எல்லா கால கட்டத்திலேயும் சீராக பால் வழங்க கூடியது, என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வறட்சியைச் சமாளிக்க போர்க்கால நடவடிக்கை: சித்தராமையா**

கர்நாடத்தில் பல்வேறு இடங்களில் நிலவும் வறட்சியைச் சமாளிக்க மாநில அரசு போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அந்த மாநில சித்தராமையா தெரிவித்தார்.

பெங்களூரு விதான செளதா மாநாட்டு அரங்கில் செவ்வாய்க்கிழமை அமைச்சர்கள், ஆட்சியர், அதிகாரிகளுடன் வறட்சி தொடர்பாக நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியது:

கர்நாடகத்தில் பெரும்பாலான இடங்களில் வறட்சி தலைதூக்கியுள்ளது. இதற்குத் தேவையான நிவாரணப் பணிகளில் அதிகாரிகள் ஈடுபட வேண்டும். அவசியம் ஏற்பட்டால் மட்டுமே விடுமுறை எடுக்க வேண்டும்.

உரிய காரணங்கள் இல்லாமல், விடுமுறை எடுக்க யாருக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது. 42 ஆண்டுகளுக்குப் பிறகு மாநிலத்தில் கடும் வறட்சி தலைதூக்கியுள்ளது. மத்திய அரசின் ஒப்புதலுடன் 135 வட்டங்கள், வறட்சி வட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் 65 சதம் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தில் மழை குறைந்துள்ளதால், 13 அணைகளில் தண்ணீர் இல்லாமல் வறண்டு போய் உள்ளன. வறட்சி நிவாரணப் பணிகளுக்கு ரூ. 350 கோடி நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

அதிகாரிகள் குடிநீர், கால்நடைகளுக்குத் தீவனம் ஆகியவற்றின் நிவாரணத்திற்கு அதிகம் கவனம் செலுத்த வேண்டும். நிதி நிலைமையில் பிரச்னை என்றால் மேலதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்து, பிரச்னையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள் தங்களது பணிகளைச் சவாலாக ஏற்றுக் கொண்டு பணியாற்ற வேண்டும். மாவட்ட, வட்ட அளவில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதில் அதிகாரிகள் அலட்சியம் காட்டினால் அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்கொலை செய்து கொண்டுள்ள விவசாயிகளின் குடும்பங்களுக்கு நிதி உதவி செய்வதில் தாமதமானால் அதற்கு ஆட்சியர்களே பொறுப்பேற்க வேண்டும். மாநிலத்தில் வறட்சியைச் சமாளிக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அதிகாரிகளின் ஒத்துழைப்பு அவசியம் என்றார்.

**கடலாடியில் ரூ. 24,000 கோடியில் அனல் மின் நிலையம்: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**



ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் ரூ. 24,000 கோடியில் 4,000 மெகா வாட் திறனுள்ள மாபெரும் அனல் மின் நிலையம் நிறுவப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

சட்டப் பேரவையில் 110 விதியின் கீழ் அவர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

தமிழகத்தை மின்சாரத்தில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக மாற்றுவதற்காக "தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023'-இல் நிர்ணயித்த இலக்கான 20,000 மெகா வாட் மின் நிறுவுதிறனை ஏற்படுத்தும் நோக்கத்துடன், பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டு அதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டில் புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. ராமநாதபுரம் மாவட்டம், கடலாடி வட்டத்தில் 4,000 மெகா வாட் திறன் கொண்ட ஒரு மாபெரும் அனல் மின் நிலையம் ரூ. 24,000 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் திட்டத்துக்குத் தேவையான சுமார் 3,000 ஏக்கர் நிலம்

நல்லாம்பட்டி வருவாய்க் கிராமத்தில் கண்டறியப்பட்டுள்ளது. தேவையான திட்ட அனுமதிகளைப் பெற்ற பிறகு இந்த மின் திட்டம் தொடங்கப்படும்.

துணை மின் நிலையங்கள்: மின் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் 400 கிலோ வோல்ட், 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின் கட்டமைப்பை மேலும் வலுப்படுத்தும் வகையில், வடசென்னையில் 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், ரூ. 2,335 கோடியில் நிறுவப்படும்.

இந்தத் தொகுப்பு மின் நிலையம், அரியலூரில் உள்ள 765 கிலோ வோல்ட் மின் நிலையம், புளியந்தோப்பில் உள்ள 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்படும்.

வடசென்னை, எண்ணூரில் அமையவிருக்கும் அனல் மின் நிலையங்களில் உற்பத்தியாகும் மின்சாரத்தை வெளியேற்ற இது வழிவகை செய்யும்.

அரியலூரில் 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ரூ. 2,121 கோடியில் நிறுவப்படும். இந்தத் துணை மின் நிலையம், திருவலத்தில் உள்ள 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்துடன் இணைக்கப்பட்டு, வட சென்னை, எண்ணூரில் அமைய உள்ள அனல் மின் நிலையங்களில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தை எடுத்துச் செல்ல உதவும்.

கோவையில் 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் ரூ. 2,335 கோடி மதிப்பீட்டில் நிறுவப்படும். இந்தத் துணை மின் நிலையம் அரியலூர் 765 கிலோ வோல்ட் துணை மின் நிலையம், 400 கிலோ வோல்ட் திறனுள்ள எடையார்பாளையம், ராசிபாளையம் துணை மின் நிலையங்களுடன் இணைக்கப்பட்டு, கோவை, சேலம், மேட்டூர் பகுதிகளின் மின் கட்டமைப்பை வலுப்படுத்தும்.

தடையில்லா மின்சாரம்: எனது தலைமையிலான அதிமுக அரசு 2011-

இல் பொறுப்பேற்றதிலிருந்து, தமிழ்நாடு மின் உற்பத்தி, பகிர்மானக் கழக மின் திட்டங்கள், கூட்டு முயற்சித் திட்டங்கள், மத்திய மின் உற்பத்தித் திட்டங்களிலிருந்து கிடைக்கும் பங்கு, மின் கொள்முதல் என 5,954 மெகா வாட் மின்சாரம் மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தில் தடையில்லா மின்சாரம் கிடைத்து வருகிறது என்றார் முதல்வர் ஜெயலலிதா.

**விதை கிராமத் திட்டப் பயிற்சி**

வத்தலகுண்டு ஊராட்சி அலுவலக கூட்ட அரங்கில் பயறு வகை விதை கிராமத் திட்டப் பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது.

விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்து கொள்ளும் நோக்கத்துடன் நடைபெற்ற இந்த பயிற்சிக்கு திண்டுக்கல் உழவர் பயிற்சி நிலைய வேளாண் துணை இயக்குநர் பாஸ்கரன் தலைமை வகித்தார். இதில் உழவியல் மற்றும் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் பற்றிய தொழில் நுட்பங்களை காந்தி கிராம வேளாண் அறிவியல் மைய தொழில் நுட்ப வல்லுநர்கள் உதயகுமார், ஷாகின்தாஜ், திண்டுக்கல் விதைச் சான்று மற்றும் அங்ககச் சான்று உதவி இயக்குநர் விஜயராணி, வத்தலகுண்டு வேளாண் உதவி இயக்குநர் அ.கோபால்ராஜ், துணை வேளாண்மை அலுவலர் வேல்முருகன் ஆகியோர் விளக்கினர்.ஏற்பாடுகளை விதைக் கிராமத் திட்டப் பயிற்சிக்கு அட்மா திட்ட அலுவலர் கார்த்திகா, வட்டார தொழில் நுட்ப மேலாளர் கண்ணன் மற்றும் விக்னேஷ்வரி, உதவி தொழில் நுட்ப அலவலர்கள் செய்திருந்தனர்.

**நவீன கரும்பு சாகுபடி பயிற்சி முகாம்**

விருதுநகர் மாவட்டம்,கோவிலாங்குளத்தில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் நீடித்த நவீன

கரும்பு சாகுபடி குறித்த பயிற்சி திங்கள்கிழமை நடைபெற்றது. திட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயலட்சுமி பயிற்சியை தொடக்கி வைத்தார்.

மண்டல ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் பால்பாண்டி, பூர்ணியம்மாள், ராஜேந்திரன் மாரீஸ்வரி உள்ளிட்டோர் கரும்பு சாகுபடி குறித்த பல்வேறு விளக்கங்களை அளித்தனர்.

**பால் கொள்முதல் குறைவு: இறைச்சிக்காக விற்கப்படும் கறவை மாடுகள்**

தனியார் பால் நிறுவனங்கள் பால் கொள்முதலை பாதியாகக் குறைத்துள்ளதால் வெள்ளக்கோவில் பகுதியில் கறவை மாடுகள் இறைச்சிக்காக விற்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

வெள்ளக்கோவில், சுற்றுவட்டாரப் பகுதிகளில் பால் உற்பத்தி முக்கியத் தொழிலாக உள்ளது. இப்பகுதிகளில் காங்கயம் இன மாடுகளைக் காட்டிலும் கூடுதலாகப் பால் தரும் சிந்து கலப்பின மாடுகள் அதிக எண்ணிக்கையில் வளர்க்கப்படுகின்றன. இங்கிருந்து பெறப்படும் பால், ஆவின் நிறுவனம், தனியார் நிறுவனங்கள் மூலம் விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், இந்நிறுவனங்கள் பல்வேறு காரணங்களைக் காட்டி பால் கொள்முதலை 50 சதவீதம் வரை குறைத்துள்ளது. இதனால், கறவை மாடுகள் வைத்திருக்கும் விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர். இந்த நஷ்டத்தை ஈடுகட்டும் விதமாக விவசாயிகள் தங்களது கறவை மாடுகளை விற்கத் தொடங்கியுள்ளனர். இதன் காரணமாக வெள்ளக்கோவில் பகுதிகளில் இருந்து ஈரோடு, கன்னிவாடி, ஒட்டன்சத்திரம் சந்தைகளுக்கு அதிகளவிலான கறவை மாடுகள் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகின்றன.

இதுகுறித்து மாட்டு வியாபாரி தங்கவேல் கூறுகையில், "சந்தைக்கு மாடுகளின் வரத்து அதிகரித்துள்ளதால், அவற்றின் விலை மிகவும்

குறைந்துள்ளது. கறவை மாடுகள் இறைச்சிக்காகவும் விற்பனை செய்யப்படுகிறது' என்றார்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

கோமாரி நோய் தடுப்பூசி முகாம் ஈரோடு அருகே வேட்டுவம்பாளையத்தில் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், ஈரோட்டை அடுத்த நசியனூர் அருகே வேட்டுவம்பாளையத்தில் நடைபெற்ற இம்முகாமை தொடங்கி வைத்த அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

ஈரோடு மாவட்டத்தில் இந்நோய் பரவுவதைத் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கோமாரி நோய் தடுப்பூசி முகாம் அமைக்கப்பட்டு அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளது. செவ்வாய்க்கிழமை முதல் செப்டம்பர் 21-ஆம் தேதி வரை மாவட்டம் முழுவதும் 3 லட்சத்து 71 ஆயிரத்து 700 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும். செப்டம்பர் 21 முதல் 30-ஆம் தேதி வரை விடுபட்ட கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும்.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கால்நடை உதவி மருத்துவர் தலைமையில் 117 குழுக்கள் மூலமாக தினமும் காலை 6 முதல் 9 மணி வரையும், மாலை 3 முதல் 5 மணி வரையும் தடுப்பூசி போடப்படும். தடுப்பூசி போடப்பட்ட கால்நடைகள் அனைத்துக்கும் தனித்தனியாக அடையாள அட்டை வழங்கப்படும் என்றார்.

இதில், ஈரோடு துணை மேயர் கே.சி.பழனிசாமி, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் சு.பழனிசாமி,

நசியனூர் பேரூராட்சித் தலைவர் பழனியம்மாள், துணைத் தலைவர் காமராஜ், கூட்டுறவு வங்கித் தலைவர் லோகநாதன், சிக்கன கடன் சங்கத் தலைவர் கணேஷ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**செப். 4-ல் உழவர் பாதுகாப்பு திட்ட முகாம் தொடக்கம்**

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் செப்டம்பர் 4-ஆம் தேதி முதல் தொடங்கவுள்ளது என வருவாய் அலுவலர் ரெ.சதீஷ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, அவர் செவ்வாய்க்கிழமை விடுத்த செய்தி:

தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் குறு, சிறு விவசாயிகள், விவசாயக் கூலிகள், குத்தகைதாரர்கள் இத்திட்டத்தின் கீழ், மூல உறுப்பினராகப் பதிவு செய்ய தகுதியுடையவர்களாவர். மூல உறுப்பினரைச் சார்ந்து வாழும் (அதாவது பொருள் ஈட்டாத) இதர குடும்ப உறுப்பினர்கள் இத்திட்டத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்படுவர்.

இத்திட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு திருமண உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, இயற்கை மரண உதவித்தொகை, விபத்து நிவாரணத் தொகை உள்ளிட்ட மாதாந்திர உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

உழவர் பாதுகாப்புத் திட்டம் குறித்த விழிப்புணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையிலும், தகுதியான பயனாளிகள் அனைவரும் இத்திட்டத்தின் கீழ் பயனடையும் வகையிலும், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் செப்டம்பர் 4-ஆம் தேதி முதல் கிராமம் வாரியாக தினமும் சிறப்பு முகாம்கள் நடைபெற உள்ளன என்றார்.

**சீமைக் கருவேல மரங்களை அகற்ற தீர்மானம்**

நிலத்தடி நீரை உறிஞ்சும் தன்மை கொண்ட சீமைக் கருவேல மரங்களை அகற்றுவது என அளுக்குளி ஊராட்சிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கோபி யூனியன் அளுக்குளி ஊராட்சிக் கூட்டம், தலைவர் மயில்சாமி தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

இதில், திறந்தவெளி கழிப்பிடங்களை முற்றிலும் தவிர்த்து வீடுகளில் சுகாதாரமான கழிப்பறைகளை கட்டித் தருதல், மூடப்படாத ஆழ்குழாய் கிணறுகள், பயனற்ற கிணறுகளை கண்டறிந்து பாதுகாப்பு ஏற்பாடு செய்வது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

நிலத்தடி நீரை அதிக அளவில் உறிஞ்சி சுற்றுச் சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் கருவேல மரங்களை ஊராட்சி முழுவதும் வெட்டி அகற்றுவது என்பன உள்ளிட்ட் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**நீலகிரியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

நீலகிரி மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இம்முகாமை உதகை அருகே உள்ள நீத்தி கிராமத்தில் மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தொடங்கி வைத்துப் பேசியதாவது:

கோமாரி நோயை கட்டுப்படுத்தும் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் செப்டம்பர் 1 முதல் 21-ஆம் தேதி வரையிலும், விடுபட்ட கால்நடைகளுக்கு செப்டம்பர் 22 முதல் 30-ஆம் தேதி வரையிலும் தடுப்பூசி போடப்படும்.

எனவே, விவசாயிகள் தங்களது கிராமங்களில் எந்தெந்த தினங்களில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது என்ற விவரத்தை அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை, கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையங்களை நேரடியாக தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்றார். முகாமில், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் வி.தங்கவேலு, சிறப்பு மருத்துவர் ஜெகன்மோகன், உதவி இயக்குநர் மகேந்திரன், ஆவின் மேலாளர் டாக்டர் சைலேந்திரகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 7.20 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி: ஆட்சியர் தகவல்

திருவண்ணாமலை மாவட்டத்தில் 7 லட்சத்து 20 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைவரும் தங்களது கால்நடைகளுக்கு இலவசமாகத் தடுப்பூசி போட்டு பயன்பெறலாம் என்று மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்தார்.

திருவண்ணாமலையை அடுத்த தேவனாம்பட்டு கிராமத்தில் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் முகாம் தொடக்க விழா செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற இந்த முகாமை மாவட்ட ஆட்சியர் அ.ஞானசேகரன் தொடக்கி வைத்தார்.

தொடர்ந்து ஆட்சியர் அ.ஞானசேகரன் பேசியது:

கால்நடைகளில் கோமாரி நோய்த் தாக்குதலைத் தடுக்கும் வகையில் தமிழக அரசு சார்பில் இலவசமாகத் தடுப்பூசிகள் போடப்படுகின்றன. அதன்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை முதல் செப்டம்பர் 21-ஆம் தேதி வரை 9-ஆவது சுற்று கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்படுகிறது.

மாவட்டம் முழுவதும் உள்ள 7 லட்சத்து 20 ஆயிரம் கால்நடைகளுக்கு இந்த முறை இலவசமாகத் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி போடும் பணிகள் மாவட்டத்தில் மொத்தமுள்ள 860 ஊராட்சிகளிலும் நடைபெறும்.

எனவே, அந்தந்த கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்பெறலாம். மாவட்டத்தில் தடுப்பூசி போடாத கால்நடைகளே இல்லை என்ற நிலையை உருவாக்க விவசாயிகள் ஒத்துழைப்பு தர வேண்டும் என்றார்.

முகாமில், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் பா.முத்தமிழ்ச்செல்வன், துரிஞ்சாபுரம் ஒன்றியக் குழுத் தலைவர் அ.கோவிந்தராஜ், தேவனாம்பட்டு ஊராட்சித் தலைவர் கோ. துரை, கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் எஸ்.கந்தசாமி, உதவி இயக்குநர் பி.செல்லன், பிரதம மருத்துவர் கே.பன்னீர்செல்வம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## செப்.7-இல் தீவனப்பயிர் சாகுபடி பயிற்சி முகாம்

நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 7-ஆம் தேதி காலை 9 மணிக்கு தீவனப்பயிர் சாகுபடி மற்றும் விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து, பயிற்சி ஒருங்கிணைப்பாளர் பி.மோகன் வெளியிட்ட செய்தி: முகாமில் கறவை மாடுகள் மற்றும் ஆடுகளுக்கு உகந்த தீவனப்பயிர் வகைகள், மண்ணின் தன்மைக்கேற்ற தீவனப்பயிர்கள் குறிப்பாக, மானாவாரி மற்றும் வறட்சியைத் தாங்கி வளரக்கூடிய தானிய, பயறுவகை, புல்வகை மற்றும் மரவகைத் தீவனப்பயிர்கள், சாகுபடி,

அதிலுள்ள சத்துக்கள், புதிய ரகங்கள், விதை நேர்த்தி செய்யும் முறைகள், விதை அளவு, பயிர் இடைவெளி, விதைப்பு செய்தல், உரமிடுதல், சொட்டுநீர், தெளிப்புநீர் பாசனம் செய்தல், பல்வேறு தீவனப்பயிர்களில் விதை உற்பத்தி செய்யும் முறைகள், விதை சுத்திகரிப்பு, விதைச் சான்று பெறும் வழிமுறைகள் மற்றும் மரவகை தீவனப்பயிர்களில் நாற்றுகள் உற்பத்தி செய்யும் முறைகள் குறித்த பயிற்சி அளிக்கப்படும்.

இதில், விவசாயிகள், பண்ணையாளர்கள், ஊரக மகளிர், இளைஞர்கள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் கலந்து கொள்ளலாம். விருப்பமுள்ளவர்கள் நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்துக்கு நேரில் வந்தோ, அல்லது 04286--266345 என்ற தொலைபேசி எண் மூலமாகவோ வரும் 6-ஆம் தேதிக்குள் பெயரை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.பயிற்சிக்கு வரும் விவசாயிகள் தங்களுடைய ஆதார் எண்னை கண்டிப்பாக பதிவு செய்யவேண்டும்

**நாமகிரிப்பேட்டையில் ரூ.51 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்**

நாமகிரிப்பேட்டை வேளாண்மை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,055 மஞ்சள் மூட்டைகள் ரூ.51 லட்சத்துக்கு ஏலம் போயின.

நாமகிரிப்பேட்டையில் செவ்வாய்க்கிழமை நடந்த மஞ்சள் ஏலத்தில், நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் மற்றும் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகளும், தனியார் மஞ்சள் மண்டி உரிமையாளர்களும் பங்கேற்றனர்.இதில், விரலி 800 மூட்டை, உருண்டை ரகம் 250 மூட்டை, பனங்காளி ரகம் 5 மூட்டை என தலா 65 கிலோ கொண்ட மொத்தம் ஆயிரத்து 55 மூட்டைகள் ஏலத்துக்குக் கொண்டுவரப்பட்டன.

இந்த ஏலத்தில், விரலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.9,290 முதல் குறைந்தபட்சமாக ரூ.7,499-வரையிலும், உருண்டை ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.7,869 முதல் குறைந்தபட்சமாக ரூ.6,499-வரையிலும் ஏலம் போனது. பனங்காலி ரகம் ஒரு குவிண்டாலுக்கு அதிகபட்சமாக ரூ.12,009 முதல் குறைந்தபட்சமாக ரூ.7,409-வரையிலும் ஏலம் போனது. மொத்தம் ரூ.51 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது.

**3.53 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடக்கம்**

நாமக்கல் மாவட்டத்தில் 3.53 லட்சம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

நாமக்கல் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில், நாமக்கல் அருகே மாரப்பநாயக்கன்பட்டி கிராமத்தில், ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி கோமாரி நோய் தடுப்பூசி முகாமை தொடக்கி வைத்தார்.

இதில் ஆட்சியர் பேசியது: நாமக்கல் மாவட்டத்தில், ஒன்றாம் தேதி தொடங்கி 21 நாள்களுக்கு கால்நடைகளுக்கான 9-ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற உள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில், மொத்தமுள்ள 3.53 லட்சம் கால்நடைகளுக்கும் 100 சதவீதம் முழுமையாக இத்தடுப்பூசி போடத்திட்டமிடப்பட்டுள்ளது.

இத்தடுப்பூசிப் பணிக்காக, மாவட்டம் முழுவதும் கால்நடை உதவி மருத்துவர்கள், கால்நடை ஆய்வாளர்கள், கால்நடை பராமரிப்பு உதவியாளர்களைக் கொண்டு 111 தடுப்பூசி குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாவட்டத்திலுள்ள அனைத்து குக்கிராமங்களுக்கும் நேரில் சென்று அந்தந்த கிராமங்களிலேயே தடுப்பூசி போட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதனால், நாமக்கல் மாவட்ட கால்நடை வளர்ப்போர், 3 மாதத்துக்கு மேற்பட்ட கன்றுகள், பசு, எருது, எருமை ஆகிய கால்நடைகளை ஒவ்வொரு கிராமத்திலும் குறிப்பிடப்பட்ட நாளில், குறிப்பிட்ட இடத்தில் நடைபெற உள்ள முகாமுக்கு அழைத்துச் சென்று கோமாரி நோய்த் தடுப்பூசி தவறாமல் போட வேண்டும் என்றார்.

முகாமில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் பி.சக்திவேல், வட்டாட்சியர் கதிரேசன், ஆவின் நிறுவன உதவிப் பொது மேலாளர் கே.முருகு செல்வன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர்கள் எஸ்.பாஸ்கர், ஜனகராஜ், டி.புருசோத்தமன், சிவப்பிரகாசம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோமாரி நோய் இல்லா மாவட்டமாக அரியலூர் திகழ வேண்டும்: ஆட்சியர் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

அரியலூர் மாவட்டத்தை கால்நடைகளுக்கு கோமாரி நோய் இல்லாமாவட்ட மாக மாற்ற வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், பார்ப்பனச்சேரி கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாமினை செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்து, அவர் மேலும் பேசியது:

கால்நடைகளை தாக்கும் கோமாரி நோயானது மழை, பனி காலங்களில் தண்ணீர்,காற்று ஆகியவற்றின் மூலமாக மிக விரைவில் பரவக்கூடியது. இந்நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகளின் வாய், நாக்கு, கால் குழம்பு ஆகிய பகுதிகளில் புண்கள் ஏற்படும். நாளடைவில் கால்நடைகள் இறந்து விடும். எனவே, மழைக்காலம் தொடங்க உள்ள நிலையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் செவ்வாய்க்கிழமை முதல் செப். 21 வரை மேற்கொள்ளப்பட உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 201 ஊராட்சிகளில் ஒரு லட்சத்து 69 ஆயிரம் கால்நடைகள் பயன்பெறும் வகையில் ரூ.13 லட்சத்து 44 ஆயிரம்

மதிப்பில் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக கால்நடை மருத்துவர்கள் கொண்ட குழுக்கள் ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்வார்கள். எனவே, கோமாரி நோய் இல்லா மாவட்டமாக அரியலூர் திகழ ஒத்துழைக்க வேண்டும் என்றார் அவர். இம்முகாமில், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் டாக்டர் பாஸ்கர், செய்தி,மக்கள்-தொடர்பு அலுவலர் செந்தில் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**நாட்டுக் கோழி வளர்ப்புக்கு 25% அரசு மானியம்**

அரியலூர் மாவட்டத்தில் நாட்டுக் கோழி வளர்ப்புக்கு 25% மானியம் வழங்கப்படுகிறது என்றார் மாவட்ட ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ்.

அரியலூர் மாவட்டத்தில் கோழி அபிவிருத்தித் திட்டம் 2015 - 16 ன் கீழ் நாட்டுக்கோழிகள் (Native Chicken) 25% மானியத்தில் வளர்க்க ஆர்வமுள்ள, தகுதியான விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

மேலும், இத்திட்டத்தில் பயன்பெற விருப்பமுள்ளவர்கள், கோழி கொட்டகை அமைக்க வேண்டும். ஒரு கோழிக்கு 1 சதுர அடி அடிப்படையில் 250 கோழி வளர்க்க 250 சதுர அடி இடம் தேவைப்படும். 250 கோழிகள் வளர்க்க செலவு மற்றும் ஒரு அலகின் மதிப்பு ரூ.1,29,500 ஆகும்.

ஒரு நாள் வயதுள்ள நாட்டுக்கோழி குஞ்சுகளை வாங்கி 12 - 14 வாரங்கள் வளர்த்து விவசாயிகளே விற்பனை செய்யலாம். இதேபோல்,வருடத்துக்கு 3 முறை விற்பனை செய்ய இயலும். சுய முதலீடு (அ) வங்கிக் கடன் மூலம் நாட்டுக்கோழிவளர்ப்பவர்களுக்கு

அரசு மானியம் 25% (ரூ. 32,375) முன் மான்யமாக வழங்கப்படும். ஒரு பயனாளி அதிகபட்சமாக 500 நாட்டுக்கோழிகள் வளர்க்கலாம்.ஆர்வமுள்ளவர்கள் அருகில் உள்ள கால்நடை மருந்தகம், உதவி இயக்குநர் அலுவலகம் (அ) மண்டல இணை இயக்குநர் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெறலாம். மேலும் விவரங்களுக்கு, 94439 54958, 94450 01207 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என ஆட்சியர் எ. சரவணவேல்ராஜ் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மருத்துவ முகாம்**

கரூர் அருகே தென்னிலையில் நடைபெற்ற குடற்புழு நீக்க முகாமில் 300 விலையில்லா ஆடுகளுக்கு குடற்புழு நீக்க மற்றும் டெட்டனஸ் தடுப்பூசி போடப்பட்டது.

கரூர் அருகே தென்னிலை கால்நடை மருந்தகம் சார்பில் தென்னிலை மேற்கு ஊராட்சியில் விலையில்லா ஆடுகள் பெற்ற பயனாளிகளுக்கு குடற்புழு நீக்க முகாம் புளியம்பட்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கால்நடை மருத்துவர் மோகன்ராஜ் வரவேற்றார். ஒன்றிய கவுன்சிலர் மொஞ்சனூர் இளங்கோ முன்னிலை வகித்தார்.

ஊராட்சித் தலைவர் பொன்னுசாமி பயனாளிகளுக்கு ஆடு கொட்டகை அமைப்பதற்காக ரூ. 2,000-க்கான காசோலையை வழங்கி முகாமை தொடங்கிவைத்தார். முகாமுக்கு தென்னிலை கால்நடை மருத்துவர் கலைவாணி தலைமை வகித்தார்.

முகாமில் கால்நடை மருத்துவர்கள் மோகன்ராஜ், கலைவாணி, கால்நடை ஆய்வாளர் ஜானகி, கால்நடை பராமரிப்பு உதவியாளர் மரிய உபகாரம், முருகேசன், உள்ளிட்ட மருத்துவ குழுவினர் 300 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் கோமாரி நோய் தடுப்பூசி ஆகியவை வழங்கப்பட்டது.

**1.88 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட திட்டம்**

கரூர் மாவட்டத்தில் 1,88,250 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட திட்டமிடப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்தார்.

கரூர் மாவட்டம், கரூர் நகராட்சிக்குட்பட்ட எஸ். வெள்ளாளப்பட்டியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசி 9-வது சுற்று முகாமை தொடக்கிவைத்து அவர் பேசியது:

தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை சிறப்பு முகாம் நடத்தி, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது. கரூரில் 9ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் செவ்வாய்க்கிழமை முதல் வரும் 21ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இந்த சிறப்பு முகாமில் ஒவ்வொரு கிராமத்திலும் பசுவினம், எருமை இனங்களை கணக்கிட்டு அனைத்துக்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கலப்பின மாடுகளை அதிகம் தாக்கும் இந்நோயால் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு மற்றும் கறவை மாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுவது, இளம் கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளை ஏற்படுத்தும். இவற்றை தவிர்க்கவே கோமார் தடுப்பூசி போடப்படுகிறது.

எனவே தங்கள் பகுதியில் நடைபெறும் சிறப்பு முகாமில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு நோய் தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் கால்நடைபராமரிப்புத் துறை இணை இயக்குநர் ராமநாதன், உதவி இயக்குநர்கள் குழந்தைசாமி, முருகன், ராஜேந்திரன், வட்டார மருத்துவ அலுவலர் கன்னியப்பன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காக்கும் வகையில் 21 நாள்கள் நடத்தப்படும் தடுப்பூசி முகாம் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

புதுக்கோட்டை ஒன்றியம், திருமலைராய சமுத்திரம் ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் நடைபெற்ற கோமாரி நோய் தடுப்பூசிக்கான 9-வது சுற்று முகாமை ஆட்சியர் சு. கணேஷ் தொடக்கி வைத்துப் பேசியது:

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. அதன்படி புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஏற்படாமல் தடுக்கும் வகையில் 9-வது சுற்று தடுப்பூசி போடும் பணி தொடங்கியுள்ளது. இதைப்போல மாவட்டத்திலுள்ள 13 ஊராட்சி ஒன்றியங்களில் தடுப்பூசி போடும் முகாம்கள் செவ்வாய்க்கிழமை (1.9.2015) முதல் (21.9.2015) 21 நாட்களுக்கு காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும், மதியம் 3 மணி முதல் 5 மணி வரையிலும் மேற்கொள்ளப்படும். இதில் 60 கால்நடை மருத்துவக் குழுக்கள் மூலம் மாவட்டத்திலுள்ள 3,86,659 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படும்.

எனவே, இம்முகாமின் மூலம் கால்நடை வளர்ப்போர் தங்களது கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசியினை தவறாமல் போட்டு கால்நடைகளை கோமாரி நோய் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் மோகனரங்கன், துணை இயக்குநர் ரவீந்திரன், ஊராட்சித் தலைவர் கலியபெருமாள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**ஆவணத்தான்கோட்டையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

அறந்தாங்கி அருகே ஆவணத்தான்கோட்டையில் செவ்வாய்க்கிழமை கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

ஆவணத்தான்கோட்டை ஊராட்சித் தலைவர் எஸ். குமரேசன் தலைமை வகித்தார். அறந்தாங்கி கோட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் பி. சின்னதுரை தொடக்கிவைத்தார்.

ஆவணத்தான்கோட்டை கால்நடை மருந்தக உதவி மருத்துவர் எஸ். உதயபெருமாள் தலைமையில் மருத்துவக் குழுவினரால் மாளிகைபுஞ்சை, வைத்தியநாதன்வயல், வாடிக்காடு, ஆவணத்தான்கோட்டை மேற்கு ஆகிய பகுதிகளை சேர்ந்த 300 மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

தஞ்சாவூர் மாவட்டம், கடகடப்பை ஊராட்சியில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், 9-ஆவது சுற்று கோமாரி நோய் ஒழிப்பு தடுப்பூசி போடும் முகாமை ஆட்சியர் என். சுப்பையன் செவ்வாய்க்கிழமை தொடங்கி வைத்தார்.

அப்போது, அவர் பேசியது:

கால்நடைகளில் ஏற்படும் கோமாரி நோய்க்கு சிகிச்சை கிடையாது, தடுப்பூசி மட்டுமே மருந்தாகும்.

இந்த நோய் பாதிப்பு ஏற்படின் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவதுடன், சினைப்பிடிப்பதிலும் தாமதம் ஏற்படும். இளங்கன்றுகளுக்கு இந்நோய் ஏற்படின் 100 சதவீதம் இறப்பு ஏற்படும். ஆகையால் இந்நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசியே சிறந்ததாகும். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் கோமாரி நோயை 100 சதவீதம் கட்டுப்படுத்தி, ஒழிக்க முடியும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.86 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் ஒழிப்பு தடுப்பூசிப் போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கோமாரி

நோய்த் தடுப்பூசி செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் 21- ஆம் தேதி வரை, தொடர்ந்து 3 வாரங்களுக்கு இம்முகாம் நடைபெறுகிறது. பொதுமக்கள் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர் என்.சுப்பையன்.

முகாம் தொடக்க நிகழ்ச்சியில் தஞ்சாவூர் மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குநர் செல்வவிநாயகம், உதவி இயக்குநர் நெடுஞ்செழியன், கால்நடை மருத்துவர்கள் புஷ்பலதா, செந்தில்ராஜன், ஊராட்சித் தலைவர் ஜெ.ஏ. செந்தில்வேலன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**குமரி மாவட்டத்தில் கடும் வெயில்**

குமரி மாவட்டத்தில் கடும் வெயில் நிலவுவதால் அணைகளுக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்துள்ளது.

மாவட்டத்தில் கடந்த ஜூன் மாதம் பெய்த பலத்த மழையால் பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு, மாம்பழத்துறையாறு, முக்கடல் உள்ளிட்ட அனைத்து அணைகளும் நிரம்பின.

தற்போது மாவட்டத்தில் கடும் வெப்பம் நிலவுவதால், அணைகளுக்கு நீர்வரத்து வெகுவாக குறைந்தது. முக்கிய அணையான பேச்சிப்பாறை அணைக்கு விநாடிக்கு 203 கனஅடியும், பெருஞ்சாணி அணைக்கு 3 கனஅடியும் நீர்வரத்து உள்ளது. அணைகளிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடப்படுவதால் அணைகளின் நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது.

அணைகளின் நீர்மட்டம்: செவ்வாய்க்கிழமை நிலவரப்படி பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 38 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 821 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 60.90 அடியாக இருந்தது. அணையிலிருந்து விநாடிக்கு 250 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

சிற்றாறு-1 அணையின் நீர்மட்டம் 13.22 கன அடியாகவும், விநாடிக்கு 135 கன அடி அணைக்கு நீர்வரத்தும் உள்ளது. விநாடிக்கு 200 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

சிற்றாறு-2 அணையில் 13.32 அடியாகவும், பொய்கை அணையில் 8.90 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையில் 51.84 அடியாகவும் நீர்மட்டம் உள்ளது. இந்த அணைகளில் நீர்வரத்தோ, நீர் வெளியேற்றமோ இல்லை.

அணைகளின் நிலவரம் குறித்து பொதுப்பணித் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், மாவட்டத்தில் கன்னிப்பூ அறுவடைப் பணிகள் நெருங்கி வருகின்றன. அணைகளின் நீர்மட்டம் அடுத்த போகத்துக்கும் ஈடு கொடுக்கும் வகையில் உள்ளது. வடகிழக்கு பருவமழை நெருங்கிவரும் நிலையில் அணைகளின் நீர்மட்டம் மீண்டும் உச்ச அளவைத் தொடும் என எதிர்பார்க்கலாம் என்றார் அவர்.

**வாழைத்தாருக்கு உறை கட்டுவது எப்படி? வேளாண் மாணவிகள் செயல்விளக்கம்**

சேரன்கோவில்பத்து கிராமத்தில் நடைபெற்ற வாழைத்தாருக்கு உறை கட்டும் செயல்விளக்க முகாமில் வேளாண் கல்லூரி மாணவிகள் பங்கேற்றனர்.

வேளாண் குறித்து விவசாயிகளின் அனுபவ அறிவை பகிர்ந்து கொள்ளும் வகையில், கிள்ளிகுளம் வேளாண் கல்லூரியில் பயிலும் இளநிலை அறிவியல் இறுதி ஆண்டு மாணவிகள் தாங்கள் படித்த உயரிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடி வருகின்றனர். அதன்படி, சேரன்மகாதேவி வட்டாரத்தில் கிராமத் தங்கல் திட்டத்தின் கீழ் மாணவிகள் களப் பயணம் மேற்கொண்டுள்ளனர். உதவிப் பேராசிரியர்கள் சி. ராஜாபாபு, பி. குமார், எஸ். செண்பகவல்லி ஆகியோர் வழிகாட்டுதலுடன், மாணவிகள் முத்துமுருகலட்சுமி,

கவிநிலவு, முத்து மகேஷ்வரி, ஜெயலட்சுமி, ஜனனி, நந்தினி, ரேவதி, சுனிதா ஆகியோர் முகாமிட்டுள்ளனர்.

இம்முகாமில், தோட்டக்கலைத்துறை உதவியுடன் சேரன்கோவில்பத்து கிராமத்தில் சித்தார்த்சம்பத் வயலில் வாழைத்தாருக்கு உறை கட்டும் தொழில்நுட்ப செயல்விளக்கப் பயிற்சி நடைபெற்றது.

வாழைத்தாரில் கடைசி வரிசை வெளிவந்ததும் அதற்கு உறை கட்ட வேண்டும்; கோடைக்கு சூரியக் கதிர் பாதிப்பைத் தவிர்க்கும் நீலநிற பிளாஸ்டிக் உறை ஏற்றது; வாழைத்தாரின் எடை 5 முதல் 25 சதவீதம் அதிகரிக்கும்; ஒரே சீரான முதிர்ச்சியும், 7 முதல் 10 நாள்கள் முன்னதாக முதிர்ச்சி கிடைக்கும்; பூச்சி நோய் தாக்குதலில் இருந்து பாதுகாக்க முடியும் என விளக்கம் அளிக்கப்பட்டது. முகாமில் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன், தோட்டக்கலை அலுவலர் சூ. சுபாவாசுகி மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## தடுப்பூசி போடுவதால் கறவை மாடுகள் கொடுக்கும் பால் அளவு குறையாது: ஆட்சியர்

கறவை மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதால், அதன் பால் கொடுக்கும் அளவு குறையாது என்றும், அதற்காக பொதுமக்கள் அச்சப்பட வேண்டாம் என்றும் மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி தெரிவித்தார்.

செஞ்சி வட்டம், கல்லாலிப்பட்டு கிராமத்தில் 9-வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணியை மாவட்ட ஆட்சியர் எம்.லட்சுமி தொடங்கி வைத்தார். இந்த முகாமைத் தொடங்கி வைத்து அவர் பேசியதாவது:

மாவட்டத்தில் பசுவினம் 6,67,212, எருமையினம் 4538 என மொத்தம் 6,71,750 கால்நடைகள் உள்ளன. கல்லாலிப்பட்டு கிராமத்தில் மட்டும் 550 மாடுகள் உள்ளன. இக் கால்நடைகளுக்கு மாவட்டம் முழுவதும் கால்நடை மருத்துவர், கால்நடை ஆய்வாளர், பராமரிப்பு உதவியாளர்

கொண்ட 107 குழுக்கள் மூலம் கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இக்கால்நடைகளுக்கு 1.9.2015 முதல் 21.9.2015 வரை கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணி நடைபெறும். இப்பணி காலங்களில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம்களில் காலை 6 மணி முதல் 9 மணி வரையும், மாலை 3 மணி முதல் 6 மணி வரையும் தடுப்பூசி போடப்படும்.

ஒவ்வொரு குழுவினரும் தினசரி 300 கால்நடைகளுக்கு தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசி போடப்படும் கால்நடைகளுக்கு அடையாள அட்டை வழங்கப்படும். 4 மாத வயதுக்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு மட்டுமே கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட உள்ளது. நிறைமாத சினை மாடுகளுக்கு தடுப்பூசி போடப்பட மாட்டாது. தடுப்பூசி போடுவதால் கறவை மாடுகளின் பால் கொடுக்கும் அளவு குறையாது என்றார். முகாமில் மண்டல இணை இயக்குநர் எம்.தங்கராசு, நோய்புலனாய்வு உதவி இயக்குநர் சு.குருவையா, கோட்ட உதவி இயக்குநர் கி.மகேந்திரன் உள்பட பலர் பங்கேற்றனர்.

பணப்பாக்கம்: இதேபோல், விக்கிரவாண்டி அருகே உள்ள பணப்பாக்கம் கிராமத்தில் கோமாரி நோய்த் தடுப்பு திட்டத்தின் கீழ் இலவச கால்நடை மருத்துவ முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

**கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் தொடக்கம்**

கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோயைத் தடுக்கும் வகையிலான தடுப்பூசி முகாம் தமிழ்நாடு முழுவதும் செவ்வாய்க்கிழமை தொடங்கியது.

இதன்படி, கடலூர் மாவட்டத்தில் அனைத்து ஊராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளிலும் முகாம் நடைபெறுகிறது.

21 நாள்கள் நடைபெறும் இம்முகாமின் மூலம் 3.50 லட்சம் கால்நடைகளுக்கு தடுப்பூசிகள் போட மாவட்ட கால்நடைத்துறை திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 53 குழுக்கள்

நியமிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குழுவிலும் கால்நடை உதவி மருத்துவர், கால்நடை ஆய்வாளர், பாதுகாப்பு உதவியாளர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

கடலூர் அருகே உள்ள கண்ணாரப்பட்டு மற்றும் காரைக்காடு ஊராட்சிகளில் நடைபெற்ற இம்முகாமில் கால்நடை உதவி மருத்துவர் சூசைமரிநிக்சன் தலைமையில் ரமேஷ், சக்திவேல், லட்சுமி, ஓய்வு பெற்ற கால்நடை ஆய்வாளர் ராஜமச்சேந்திரசோழன் ஆகியோர் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டனர். இம்முகாமில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு கால்நடை வளர்ப்போரை மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

**கிடங்குகளுக்கு உரம் விநியோகம்**

விருத்தாசலம் ரயில் நிலையத்துக்கு, தூத்துக்குடியில் இருந்து சரக்கு ரயில் மூலம் 1,320 டன் ஸ்பிக் யூரியா, காம்ப்ளக்ஸ், டி.ஏ.பி. உர மூட்டைகள் செவ்வாய்க்கிழமை வந்தடைந்தன. இதனையடுத்து, கடலூர் மாவட்ட விவசாயப் பணிகளுக்காக தனியார் உரக்கிடங்குகளுக்கு லாரிகள் மூலம் இவை அனுப்பி வைக்கப்பட்டன.

**பாரம்பரிய நெல் விழிப்புணர்வு முகாம்**

சூழலியல் மற்றும் வளர்ச்சி மையம் சார்பில் பாரம்பரிய நெல் விழிப்புணர்வு முகாம் பாகூர் களஞ்சியம் தோட்டத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பாகூர் நெல் விவசாயி கிருஷ்ண மூர்த்தி கலந்துகொண்டு பல்வேறு பாரம்பரிய நெல் விதைகளைப் பற்றியும் அவற்றை உண்பதால் உடலுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும் விளக்கமளித்தார்.

150-க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல்களின் பெயர்களையும் அவர் கூறினார். 100-க்கும் மேற்பட்ட பாரம்பரிய நெல் விதைகள் கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்ச்சியில் கஸ்தூரிபாய் காந்தி பெண்கள் அரசு மேல்நிலைப் பள்ளி நாட்டு நலப் பணித் திட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று பயனடைந்தனர். திட்ட அலுவலர் ரவிச்சந்திரன் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

**நிலக்கடலை சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முகாம்**

காலாப்பட்டு பண்ணைத் தகவல் மற்றும் விவசாயிகள் ஆலோசனை மையம் சார்பில் சஞ்சீவி நகர் கிராமத்தில் கோடைகால நிலக்கடலை சாகுபடியில் மேம்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் பயிற்சி முகாம் திங்கள்கிழமை தொடங்கியது.

நிலக்கடலை முன்னோடி விவசாயி சுப்பிரமணியன் பங்கேற்று தனது அனுபவங்கள், ஆலோசனைகள் மற்றும் நிலக்கடலை சாகுபடியில் பின்பற்றவேண்டிய வழிமுறைகளை குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.

வேளாண் அலுவலர் டி.அனுப்குமார் வரவேற்றார். ஆத்மா திட்ட இயக்குநர் ஜி.ரவிப்பிரகாசம் ஆத்மா திட்டத்தின் செயல்பாடுகளைப் பற்றியும் அதன் பயன்களை பற்றியும் மற்றும் எதிர்கால திட்டத்தை பற்றியும், நிலக்கடலை விதை உற்பத்தி பற்றி விளக்கமாக

கூறினார்.

வேளாண் அலுவலர் திருநாதன் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் பற்றி விளக்கினார். சாப்ஸ் நிறுவன நிர்வாகி அப்துல் காதர் சோலார் விளக்கு பொறி வைத்து பூச்சிகளை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்று விளக்கமாகவும் செயல்முறையாகவும் விளக்கிக் கூறினார்.

சஞ்சீவி நகர் கிராமத்தைச் சேர்ந்த 40-க்கும் மேற்பட்ட நிலக்கடலை விவசாயிகள் கலந்துகொண்டு பயன்பெற்றனர். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஆ.ஆதித்தன் நன்றி கூறினார். கிராம விரிவாக்கப் பணியாளர் பழனி மற்றும் மாதவன் உள்பட பலர் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**கர்நாடகத்தில் வறட்சி நிவாரண பணிகள் குறித்து சித்தராமையா தலைமையில் கலெக்டர்கள் மாநாடு அலட்சியமாக செயல்படும் அதிகாரிகள் மீது நடவடிக்கை**



பெங்களூரு,

கர்நாடகத்தில் நிலவி வரும் வறட்சி நிவாரண பணிகள் குறித்து முதல்–மந்திரி சித்தராமையா தலைமையில் கலெக்டர்கள் மாநாடு நடைபெற்றது. இதில் பேசிய சித்தராமையா அலட்சியமாக செயல்படும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

<u>கலெக்டர்கள் மாநாடு</u>

கர்நாடக முதல்–மந்திரி சித்தராமையா தலைமையில் கலெக்டர்கள் மாநாடு பெங்களூரு விதான சவுதாவில் உள்ள மாநாட்டு அரங்கத்தில் நேற்று நடந்தது. காலை 10 மணிக்கு தொடங்கிய இந்த மாநாட்டில்

மந்திரிகள், அனைத்து மாவட்டங்களின் கலெக்டர்கள், மண்டல கமிஷனர்கள், மாவட்ட பஞ்சாயத்து தலைமை செயல் அதிகாரிகள் மற்றும் அரசு துறைகளின் முதன்மை செயலாளர்கள் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் சித்தராமையா பேசியதாவது:–

கர்நாடகத்தில் கடந்த 42 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடும் வறட்சி நிலவுகிறது. எனவே, அவசர விஷயங்களை தவிர வேறு எதற்காகவும் அதிகாரிகளுக்கு நீண்ட நாட்கள் விடுமுறை வழங்கக்கூடாது. நீங்களும் (கலெக்டர்கள்) விடுமுறையில் செல்லக்கூடாது. ஊழியர்களை பயிற்சிக்கு அனுப்பக்கூடாது. அவ்வாறு அனுப்பி இருந்தால் அதை உடனே ரத்து செய்ய வேண்டும்.

<u>நிதி பற்றாக்குறை இல்லை</u>

குடிநீர் வினியோகம் செய்ய நிதி பற்றாக்குறை இல்லை. குடிநீர் பிரச்சினை உள்ள கிராமங்களில் நீர் ஆதாரம் இருந்தால் ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டும் இல்லாவிட்டால் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்ய இதற்கு முன் 90 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த முறை கால வரையறை நீக்கப்படுகிறது. குடிநீர் சரியாக வினியோகம் செய்யப்படுகிறதா? என்பதை நீங்கள் கண்காணிக்க வேண்டும்.

தனியார் நிலங்களில் உள்ள நீர் ஆதாரங்களை எடுக்கும் உரிமை, அரசுக்கு உள்ளது. எக்காரணம் கொண்டும் மக்கள் மற்றும் கால்நடைகள் குடிநீர் கிடைக்காமல் அவதிப்படும் நிலை உருவாகாதபடி எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். மாநிலத்தில் மொத்தம் 176 தாலுகாக்கள் உள்ளது. இதில் 135 தாலுகாக்களில் கடும் வறட்சி நிலவுகிறது. எனவே பொதுமக்களுக்கு குறிப்பாக விவசாயிகளுக்கு வேலை உறுதி திட்டத்தின் கீழ் வேலை வாங்கி கொடுத்து, அவர்கள் வெளிமாநிலங்களுக்கு செல்வதை தடுக்க வேண்டும்.

<u>கோசாலைகளை தொடங்க...</u>

கால்நடைகளை பாதுகாக்க தீவன வங்கி மற்றும் கோசாலைகளை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த பணிகளை மேற்கொள்வதில் அலட்சியம் காட்டும் தாலுகா அதிகாரிகளை பணி இடைநீக்கம் செய்ய வேண்டும். வறட்சி நிவாரண பணிகளை மேற்கொள்வதில் அலட்சியமாக செயல்படும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். வறட்சி சவாலை சரியான முறையில் எதிர்கொள்ள தேவையான நிதி குறித்து அரசுத்துறை செயலாளருக்கு கலெக்டர்கள் தெரிவிக்க வேண்டும். தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு விவரங்களை கூறலாம்.

வறட்சி காலங்களில் உண்டாகும் தொற்று நோய்களை தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். டாக்டர்கள் வருகை மற்றும் மருந்துகள் இருப்பை சுகாதாரத்துறை அதிகாரிகள் உறுதி செய்ய வேண்டும். கர்நாடகத்தில் 2013–14–ம் ஆண்டில் 54 விவசாயிகளும், 2014–15–ம் ஆண்டில் 48 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டனர். ஆனால் தற்போது 400 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டு இருப்பது ஆதங்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது. விவசாயிகளின் தற்கொலை சம்பவங்களுக்கு கடன் தொல்லை தான் முக்கிய காரணம் என்று தெரியவந்துள்ளது.

<u>மக்கள் தொடர்பு முகாம்</u>

தனியார் கந்து வட்டி கொடுமையை தடுத்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு மாவட்ட கலெக்டர்களிடம் உள்ளது. தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குடும்பங்களுக்கு விதிமுறைகள்படி நிவாரணம் வழங்க வேண்டும். நிவாரணம் வழங்குவதில் தேவை இல்லாமல் தாமதம் செய்யும் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். மைசூரு மற்றும் மண்டியா மாவட்டங்களில் இன்னும் சர்க்கரை ஆலைகள் உற்பத்தியை தொடங்கவில்லை. 7–ந் தேதி தொடங்குவதாக சர்க்கரை ஆலை உரிமையாளர்கள் கூறியுள்ளனர். இதுகுறித்து கலெக்டர்கள் கண்காணிக்க வேண்டும்.

அரசு திட்டங்களை மக்களுக்கு கொண்டு போய் சேர்ப்பதில் மாவட்ட நிர்வாகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இதனால் அதிகாரிகள் ஈடுபாட்டுடனும், சேவை நோக்கத்துடன் பணியாற்ற வேண்டும். ஒவ்வொரு மாதமும் மாவட்ட அளவில் பொறுப்பு மந்திரி தலைமையிலும், தாலுகா அளவில் எம்.எல்.ஏ. தலைமையிலும் மக்கள் தொடர்பு முகாம்களை நடத்த வேண்டும். இதன் மூலம் மக்களின் பிரச்சினைகள் உள்ளூர் அளவிலேயே தீர்க்க முடியும். கர்நாடகத்தில் இருந்து வெளிமாநிலங்களுக்கு கால்நடை தீவனம் கொண்டு செல்ல அனுமதிக்கக்கூடாது. இதை கண்காணிக்க வேண்டும்.

இவ்வாறு சித்தராமையா பேசினார்.

காலை 10 மணிக்கு தொடங்கிய மாநாடு மாலை 5 மணி வரை நடைபெற்றது.

**பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி**



பரமத்திவேலூர்,

பரமத்திவேலூர் பகுதியில் மரவள்ளிக்கிழங்கின் விலை வீழ்ச்சி அடைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்து வருகின்றனர்.

மரவள்ளிக்கிழகு பயிரீடு

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகாவுக்கு உட்பட்ட பரமத்தி, கபிலர்மலை, அண்ணாநகர், வாழவந்தி, பெருங்குறிச்சி, சோழசிராமணி,

திடுமல், பாகம்பாளையம், சின்னமருதூர், கூடச்சேரி, காசப்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு பயிர் செய்துள்ளனர்.

இந்த பகுதியில் விளையும் மரவள்ளிக்கிழங்குகளை புதன்சந்தை, புதுச்சத்திரம், மின்னாம்பள்ளி, செல்லப்பம்பட்டி, ஆத்தூர், மலைவேப்பங்குட்டை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிப்ஸ் தயார் செய்பவர்களுக்கும், சேகோ தொழில் சாலைக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

விலை வீழ்ச்சி

மேலும் மரவள்ளிக்கிழங்கு அதில் உள்ள டார்ச் மற்றும் பாயிண்ட் அடிப்படையில் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இந்த நிலையில் கடந்த வாரம் 1 டன் மரவள்ளிக்கிழங்கு ரூ.4000 வரை விற்பனையானது.

இந்த வாரம் மரவள்ளிக்கிழங்கு டன் ஒன்று ரூ.3 ஆயிரத்து 600–க்கு விற்பனை ஆனது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் மரவள்ளிக் கிழங்கின் விலை வீழ்ச்சி அடைந்து உள்ளதால் மரவள்ளி பயிரிட்டு இக்கும் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்.

**9–வது கட்டமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார்**



ஊட்டி,

9–வது கட்டமாக கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார்.

<u>கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்</u>

ஊட்டி அருகே உல்லத்தி ஊராட்சிக்குட்பட்ட நீத்தி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாம் நேற்று நடந்தது. முகாமை கலெக்டர் சங்கர் தொடங்கி வைத்தார். பின்னர் கால்நடை பராமரிப்பு குறித்த விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை பொதுமக்களுக்கு அவர் வழங்கினார். பின்னர் அவர் கூறியதாவது:–

கோமாரி நோய் கட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் இன்று (நேற்று) தொடங்கி வருகிற 21–ந்தேதி வரையிலும் கால்நடைகளுக்கு 9–வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறும். விடுபட்ட கால்நடைகளுக்கு வருகிற 22–ந்தேதி முதல் 30–ந்தேதி வரை கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறு உள்ளது.

<u>பால்வளம் குறையும்</u>

எனவே விவசாயிகள் தங்களது கிராமங்களில் எந்தெந்த நாட்களில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி நடைபெறுகிறது என்ற விவரத்தினை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கால்நடை ஆஸ்பத்திரி அல்லது கால்நடை மருந்தகம், கால்நடை கிளை நிலையங்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம்.

கோமாரி நோய் ஒரு கொடிய நோய். இது கால்நடைகளை தாக்கினால் கால்நடைகள் நோயுற்று இறக்க நேரிடும். பால்வளம் குறையும். எனவே விவசாயிகள் கோமாரி நோய் தடுப்பூசி போடப்படும் நாட்களில் தங்களது கால்நடைகளுக்கு தவறாது கோமாரி நோய் தடுப்பூசி போட்டு அதை பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்

முகாமில் மண்டல கால்நடை இணைஇயக்குநர் டாக்டர் தங்கவேலு, சிறப்பு கால்நடை பராமரிப்புத்துறை டாக்டர் ஜெகன்மோன், உதவி

இயக்குனர் டாக்டர் மகேந்திரன், ஆவின் மேலாளர் சைலேந்திரகுமார் கால்நடை உதவி டாக்டர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**கடல் வளங்களை பாதுகாத்ததற்கு விருது: பாம்பன் மீனவப்பெண் லட்சுமி தேர்வு அமெரிக்காவில் ரூ.6½ லட்சம் பரிசு பெறுகிறார்**



கடல் வளங்களை பாதுகாத்ததற்கான விருதுக்கு, பாம்பன் மீனவப் பெண் லட்சுமி தகுதி பெற்றுள்ளார். இதற்காக அவருக்கு அமெரிக்காவில் நடைபெறும் நிகழ்ச்சியில் ரூ.6½ லட்சம் பரிசு வழங்கப்படுகிறது.

விருதுக்கு தேர்வு

ராமநாதபுரம் மாவட்டத்தில் மீன்பிடி தொழில் பிரதானமாக விளங்கி வருகிறது. அதற்கு அடுத்தபடியாக மன்னார் வளைகுடா, பாக்ஜலசந்தி கடல் பகுதிகளில் இயற்கையாக விளையும் பல வகை பாசிகள் சேகரிப்பு

தொழிலில் ஏராளமான மீனவப் பெண்கள் ஈடுபட்டு வருகின்றனர். சாயல்குடி அருகே உள்ள வாலி நோக்கம் பகுதியிலிருந்து ராமேசுவரம் வடகாடு வரை உள்ள 25 கிராமத்தைசேர்ந்த சுமார் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மீனவப் பெண்கள் கூட்டமைப்பாக இந்த பாசி சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் கடல் வளங்கள் பாதிக்கப்படாமல் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக மாதத்தில் 12 நாட்கள் மட்டும் பாசி சேகரிப்பு தொழிலில் ஈடுபட்டு கடல் வளங்கள் அழியாமல் பாதுகாத்து வருகின்றனர். இந்த கூட்டமைப்பின் தலைவியாக பாம்பன் சின்னப் பாலத்தை சேர்ந்த லட்சுமி உள்ளார். இவர் அமெரிக்காவில் உள்ள சீக்காலஜி போர்டு என்ற தொண்டு நிறுவனம் மூலம் வழங்கப்படும் கடல்வளங்கள் பாதுகாப்பு விருதுக்காக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

பெருமை

இது பற்றி பேடு தொண்டு நிறுவன இயக்குனர் ராஜேந்திர பிரசாத் கூறுகையில், அமெரிக்காவில் உள்ள சீக்காலஜி போர்டு என்ற தொண்டு நிறுவனம், கடல் வளங்களை பாதுகாத்தல் என்ற பெயரில் ஆண்டு தோறும் ஒரு சிறப்பு விருது வழங்குகிறது. இந்த ஆண்டுக்கான விருதுக்கு பாம்பன் சின்னப் பாலத்தை சேர்ந்த லட்சுமி என்ற மீனவ பெண் தேர்வு செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தை சேர்ந்த மீனவப் பெண் ஒருவருக்கு கிடைப்பது குறிப்பிடத்தக்கது. இது நமது நாட்டிற்கு கிடைத்த பெருமையாகும்" என்றார்.விருது பெறும் லட்சுமி கூறியதாவது:-

காலை 6 மணிக்கு என்ஜின் பொருத்தப்பட்ட ஒரு நாட்டுப் படகு அல்லது வத்தை என்று சொல்லக் கூடிய துடுப்பு போட்டு செல்லும் படகில் 15 மீனவ பெண்கள், பாம்பன் அருகே உள்ள குருசடை தீவு, மனோலி தீவு, வாலை தீவு வரை பாசிசேகரிக்க செல்கின்றோம். கரையோரத்தின் உள்ள

பாறைகளில் வளர்ந்திருக்கும் பக்கடா பாசி, கட்டக் கோரை, கஞ்சிப்பாசி, மரிக்கொழுந்து உள்ளிட்ட பல வகை பாசிகளை சேகரித்து மதியம் 3 மணிக்கு கரை திரும்புவோம்.பாசிகளை நன்றாக உலர்த்தி, வியாபாரிகளிடம் கொடுத்து மாதம் தலா ரூ.7 ஆயிரம் வீதம் ஒவ்வொருவருக்கும் வருமானம் கிடைக்கிறது. கடலில் இயற்கையாக விளையும் கடல் பாசிகளை பாது காத்து, கடல் வளங்கள் அழியாமல் பாதுகாக்கும் பொருட்டு மாதத்தில் 12 நாட்கள் மட்டுமே பாசி சேகரிக்கச் செல்கிறோம்.

பரிசுத் தொகை

ஒருவித கட்டுப்பாட்டுடன் இந்த தொழிலை நாங்கள் சேர்ந்து செய்து வருகின்றோம். எங்களுக்கு பேடு தொண்டு நிறுவனம் கடனுதவி செய்கிறது. இந்த தொண்டு நிறுவனம் மூலம் கடல் வளங்கள் பாதுகாத்தலுக்கான விருதுக்காக எனது பெயர் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி வருகிற அக்டோபர் மாதம் 8-ந்தேதி அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள பெர்க்லி நகரில் நடைபெறும் நிகழ்ச்சியில் விருதும், 10 ஆயிரம் டாலர் (இந்திய பணத்தில் ரூ.6½ லட்சம்) பரிசுத் தொகையும் வழங்கப்படுகின்றன. இதற்காக தொண்டு நிறுவனங்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினார். அப்போது உடன் பேடு தொண்டு நிறுவனத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஜார்ஜ், கடலியல் விஞ்ஞானி முனியாண்டி, ஒருங்கிணைப்பாளர் சொக்கலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

**தஞ்சை மாவட்டத்தில் 3¾ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி கலெக்டர் சுப்பையன் தகவல்**



தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் 3¾ லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கலெக்டர் சுப்பையன் தெரிவித்தார்.

<u>கோமாரி நோய் ஒழிப்பு முகாம்</u>

தஞ்சை மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை ஒழிப்பதற்கான முகாம் வருகிற 21–ந்தேதி வரை நடக்கிறது. இதையொட்டி தஞ்சையை அடுத்த கடகடப்பை ஊராட்சியில் கோமாரி நோய் ஒழிப்பு முகாம் தொடக்கவிழா நேற்றுகாலை நடந்தது. முகாமிற்கு மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி, முகாமை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் ஒரு வகை வைரஸ் கிருமியால் ஏற்படும் கொடிய நோயாகும். இந்த வகை நோய்க்கு சிகிச்சை

கிடையாது. தடுப்பூசி மட்டுமே ஒரே மருந்தாகும். இந்த நோய் பாதிப்பு ஏற்படின் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவதுடன் சினைப்பிடிப்பதில் தாமதம் ஏற்படும். மேலும் இளைப்பு ஏற்படுவதால் எருதுகளின் வேலை திறன் குறைகிறது. இளங்கன்றுகளுக்கு இந்தநோய் ஏற்படின் 100 சதவீதம் இறந்துவிடும். எனவே இந்த நோய் வராமல் தடுப்பதற்கு தடுப்பூசி அளிப்பதே சாலச்சிறந்தது ஆகும். பொதுமக்களின் ஒத்துழைப்புடன் இந்த நோயை 100 சதவீதம் முற்றிலும் ஒழிக்க முடியும்.

<u>21–ந்தேதி வரை நடக்கிறது</u>

தஞ்சை மாவட்டத்தில் 3 லட்சத்து 86 ஆயிரம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக 77 குழுக்கள் அமைக்கப்பட்டு இந்த குழுவில் ஒரு கால்நடை உதவி மருத்துவர், ஒரு கால்நடை உதவியாளர், ஒரு கால்நடை பராமரிப்பு உதவியாளர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். கோமாரி நோய் ஒழிப்பு முகாம் தஞ்சை மாவட்டத்தில் உள்ள எல்லா ஊராட்சிகளிலும் வருகிற 21–ந்தேதி வரை நடைபெற உள்ளது. இந்த முகாம் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஆவின் நிர்வாகம் மற்றும் வருவாய்த்துறையினர் ஒத்துழைப்புடன் கால்நடை பராமரிப்பு துறையினரால் நடத்தப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

விழாவில் கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் செல்வவிநாயகம், உதவி இயக்குனர் நெடுஞ்செழியன், கால்நடை டாக்டர்கள் புஷ்பலதா, செந்தில்ராஜன், ஊராட்சி மன்ற தலைவர் செந்தில்வேலன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**தேனி பகுதியில் தக்காளி விலை வீழ்ச்சி; விவசாயிகள் வேதனை**



தேனி,

தேனி பகுதியில் தக்காளி கொள்முதல் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர்.

<u>தக்காளி சாகுபடி</u>

தக்காளிக்கும், வெங்காயத்திற்கும் அப்படி என்ன தான் தொடர்போ தெரியவில்லை! விலை ஏற்றம் கிடு, கிடுவென இருப்பதும், கடுமையாக விலை வீழ்ச்சி அடைந்து விவசாயிகளை வேதனைக்கு உள்ளாக்குவதும் கடந்த சில ஆண்டுகளாக அடிக்கடி நடந்து வருகிறது. இவற்றின் உற்பத்தி அதிகரிக்கும் நிலையில் விலை குறைவதும், உற்பத்தி குறைந்தால் விலை உயர்வதும் வாடிக்கை.

அந்த வகையில் தற்போது தக்காளி சாகுபடி செய்த விவசாயிகள் வேதனைப்படும் நிலை உருவாகி உள்ளது. தேனி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் சுமார் 300 ஏக்கருக்கும் அதிகமாக விவசாயிகள் தக்காளி சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளையும் தக்காளி பழங்கள் தேனி

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்கள் மற்றும் கேரள மாநிலத்திற்கும் அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது. உள்மாவட்ட மற்றும் வெளி மாவட்ட வியாபாரிகள் விவசாயிகளிடம் நேரடியாக வந்து கொள்முதல் செய்வதை வழக்கமாக வைத்துள்ளனர்.

## விலை கடும் வீழ்ச்சி

தேனி அருகே உள்ள அரப்படித்தேவன்பட்டி, குன்னூர், அம்மச்சியாபுரம், சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி போன்ற பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள தக்காளி செடிகளில் தற்போது பழங்கள் பழுத்துள்ள நிலையில் அவற்றை பறிக்கும் பணிகள் நடந்து வருகிறது. விளைச்சல் நன்றாக இருக்கும் நிலையில், விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

சுமார் 15 கிலோ எடை கொண்ட ஒரு கூடை தக்காளி ரூ.30–க்கு வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால் உற்பத்தி செலவு கூட கிடைக்காமல் விவசாயிகள் வேதனை அடைந்துள்ளனர். அதே நேரத்தில் சந்தையில் ஒரு கிலோ ரூ.5 முதல் ரூ.8 வரை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## கடுமையான பாதிப்பு

இதுகுறித்து அரப்படித்தேவன்பட்டியில் தக்காளி சாகுபடி செய்துள்ள விவசாயி ஒருவர் கூறியதாவது:–

நான் 2 ஏக்கர் பரப்பளவில் தக்காளி சாகுபடி செய்துள்ளேன். இதற்கு நாற்றுகள் மட்டும் ரூ.18 ஆயிரத்திற்கு வாங்கினேன். பாத்தி கட்டுவதற்கு ரூ.5 ஆயிரத்து 500, நடவு செலவுக்கு ரூ.1,800 என செலவு செய்தேன்.

பல முறை மருந்து அடிக்கப்பட்டு உள்ளது. தக்காளிகளை பறிப்பதற்கு ஒரு நபருக்கு ரூ.250 வீதம் கூலி கொடுக்க வேண்டும். இதற்கிடையே நேரடியாக வந்து கொள்முதல் செய்யும் வியாபாரிகள் ஒரு கிலோ தக்காளிக்கு ரூ.2 விலையாக நிர்ணயம் செய்துள்ளனர். இதனால் தக்காளி சாகுபடி செய்த அனைவரும் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

**உடுமலை உழவர் சந்தையில் ஆகஸ்டு மாதம் ரூ.1 கோடியே 33 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனை**



உடுமலை,

உடுமலை உழவர் சந்தையில் கடந்த ஆகஸ்டு மாதம் ரூ.1கோடியே 33 லட்சத்துக்கு காய்கறிகள் விற்பனையானது.

ரூ.1 கோடியே 33 லட்சம்

உடுமலை கபூர்கான் வீதியில் உள்ள உழவர் சந்தையில் கடந்த ஆகஸ்டு மாதம் 7 லட்சத்து 51 ஆயிரத்து 240 கிலோ காய்கறிகள் விற்பனைக்கு வந்தது. 2 ஆயிரத்து 404 விவசாயிகள் கொண்டு வந்திருந்த இந்த காய்கறிகள் மொத்தம் ரூ.1 கோடியே 33 லட்சத்து 87ஆயிரத்து 615–க்கு விற்பனையானது. இந்த காய்கறிகளை 1 லட்சத்து 7ஆயிரத்து 308 நுகர்வோர் வாங்கி பயனடைந்தனர்.

கடந்த ஜூலை மாதம் 2 ஆயிரத்து 357 விவசாயிகள் கொண்டு வந்திருந்த 7 லட்சத்து 20 ஆயிரத்து 915 கிலோ காய்கறிகள் ரூ.1கோடியே 52 லட்சத்து 8 ஆயிரத்து 135–க்கு விற்பனையாகி இருந்தது. இதை 1 லட்சத்து 2 ஆயிரத்து 972 நுகர்வோர் வாங்கி பயனடைந்திருந்தனர். கடந்த ஜூலை மாதத்தை விட ஆகஸ்டு மாதம் காய்கறிகள் வரத்து 30 ஆயிரத்து 325 கிலோ கூடுதலாக இருந்தது. அதேசமயம் காய்கறிகளின் விலை குறைந்திருந்ததால் ஜூலை மாதத்தைவிட ஆகஸ்டு மாதம் விற்பனை தொகை ரூ.19 லட்சத்து 20 ஆயிரத்து 520 குறைவாக இருந்தது.

<u>காய்கறிகள் விலை</u>

உடுமலை உழவர் சந்தையில் நேற்று ஒரு கிலோ தக்காளி ரூ.4–க்கும், கத்திரிக்காய் ரூ.14 முதல் ரூ.16 வரைக்கும், வெண்டைக்காய் ரூ.10 முதல் ரூ.12 வரைக்கும், பீர்க்கங்காய் ரூ.6 முதல் ரூ.8 வரைக்கும், புடலங்காய் ரூ.10 முதல் ரூ.12 வரைக்கும், பாகற்காய் ரூ.10 முதல் ரூ.12 வரைக்கும், அவரைக்காய் ரூ.18 முதல் ரூ.20 வரைக்கும், சம்பா பச்சை மிளகாய் ரூ.16 முதல் ரூ.20 வரைக்கும், குண்டு பச்சை மிளகாய் ரூ.26 முதல் ரூ.28 வரைக்கும், முருங்கைக்காய் ரூ.14 முதல் ரூ.16 வரைக்கும் விற்றது.

ஒரு கிலோ சின்னவெங்காயம் ரூ.23 முதல் ரூ.25 வரைக்கும், பெரிய வெங்காயம்(பல்லாரி) ரூ.55 முதல் ரூ.60 வரைக்கும், சேனைக்கிழங்கு ரூ.30–க்கும், உருளைக்கிழங்கு ரூ.16 முதல் ரூ.18 வரைக்கும், கேரட் ரூ.26

முதல் ரூ.30 வரைக்கும், முட்டைக்கோஸ் ரூ.18–க்கும், காலிபிளவர் ரூ.10–க்கும், முள்ளங்கி ரூ.5–க்கும், எலுமிச்சம்பழம் ரூ.55–க்கும், இஞ்சி பழையது ரூ.90–க்கும், புதியது ரூ.35–க்கும் விற்பனை செய்யப்பட்டது

**காய்கறிகள் தினவிழா**



ஸ்ரீவில்லிபுத்தூர் வி.பி.எம்.எம். மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் வி.பி.எம்.எம். வித்யாலயா சி.பி.எஸ்.இ. பள்ளிகள் சார்பில் காய்கறிகள் தினவிழா நடந்தது. வி.பி.எம்.எம். கல்வி நிறுவனங்களின் தலைவர் வி.பி.எம். சங்கர் தலைமையில் தாங்கினார். விழாவில் அனைத்துக் கல்லூரி முதல்வர்கள், நிர்வாகிகள் கலந்து கொண்டு காய்கறி உண்பதால் ஏற்படும் நன்மைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கம் அளித்தனர்.

மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி முதல்வர் செல்வராஜ் விழாவிற்கு வருகை தந்த அனைவரையும் வரவேற்றுப் பேசினார். காய்கறிகள் உண்பதால்

ஏற்படும் பயன்களை மாணவர்கள் ஆடல்,பாடல், மற்றும் பட்டிமன்றம் மூலம் வெளிப்படுத்தினர். பெற்றோர் சார்பாக ஜெயராஜ் மாணவர்களின் நிகழ்ச்சிகளை பற்றி பாராட்டி பேசினார். சி.பி.எஸ்.இ. பள்ளி முதல்வர் வரலட்சுமி நன்றி கூறினார்.

# தினகரன்

**டெல்டா மாவட்டங்களில் பாசனத்திற்காக நீர் திறக்க முதல்வர் ஜெ. உத்தரவு...**




சென்னை: டெல்டா மாவட்டங்களில் பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். கீழணை, வீராணம் ஏரியில் இருந்து தண்ணீர் திறந்து விட முதலமைச்சர் ஜெயலலிதா ஆணையிட்டுள்ளார். முதல்வரின் இந்த உத்தரவால் தஞ்சை, நாகை, கடலூரில் ஒரு லட்சத்து 32 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக சென்னையில் நடைபெற உள்ள சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டை ஒட்டி ஆய்வு கூட்டம் நடைபெற்றது. தலைமை செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதா தலைமையில் இந்த கூட்டம் நடைபெற்றது. செப்டம்பர் 9, 10ம் தேதிகளில் நடைபெற உள்ள மாநாடு குறித்து முதல்வர் ஜெயலலிதா இந்த கூட்டத்தில் ஆலோசனை நடத்தினார். இந்த கூட்டத்தில் அமைச்சர்கள், தலைமை செயலாளர், அரசு ஆலோசகர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வறட்சியில் 'சாதித்த' ஆகஸ்ட்**




நாடு முழுவதும் கடந்த மாதம் 22 சதவீதம் மழை அளவு குறைந்துள்ளது. 1993ல் ஆரம்பித்து இதுவரை அதிக அளவு வறட்சிக்கு காரணமான மாதமாக ஆகஸ்ட் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வழக்கமாக 261 மிமீ மழை பெய்யும். ஆனால், கடந்த மாதம் 204.2 மமீ தான் பெய்துள்ளது. இந்த மாதத்திலும் போதுமான மழை பெய்யாவிட்டால் மகசூல் பாதிக்கப்படும் என்று நிபுணர்கள கூறினர்.

**தென்னையை சீரழிக்கும் சிவப்பு கூன் வண்டு அழிக்குமாறு ஆலோசனை**

சிவகங்கை: சிவகங் கை பகுதியில் தென்னை மரங்களை சீரழிக்கும் சிவப்பு கூண் வண்டுகளின் தாக்குதலை தடுத்து நிறுத்தி அவற்றை அழிக்குமாறு

விவசாயிகளுக்கு வேளாண்துறை அறிவுறுத்தியுள்ளது.சிவகங்கை வட்டார வேளாண் உதவி இயக்குநர் தனபாலன் விடுத்துள்ள அறிக்கையில்

தெரிவித்திருப்பதாவது: தற்போது சிவகங்கை வட்டார பகுதியில் தென்னை மரங்களில் சிவப்பு கூன் வண்டு தாக்குதல் அதிகம் உள்ளது. சிவப்பு கூண் வண்டானது

கருஞ்சிவப்பு நிறத்தில் மூக்கு நீண்டு காணப்படும். இவை தாக்கப்பட்ட மரங்களில்(தண்டுபாகத்தில்) துளைகள் காணப்படும். அத்துளைகளின் வாய் பகுதியில் மரச்சக்கைகள் சுருண்டு காணப்படும். அத்துளைகளிலிருந்து சிவப்பு கலந்த பழுப்பு நிறத்தில் திரவம் வடிந்திருக்கும்.

மரத்தில் காதினை வைத்துக் கேட்டால் வண்டுகளின் புழுக்கள் மரத்திசுவினை உண்ணும் சத்தம் கேட்கும். வண்டு மரத்தின் தண்டினுள் இருந்து திசுக்களை உண்பதால் மரத்திற்கு ஊட்டச்சத்து கிடைக்காமல் இலைகள் காய்ந்து மரம் இறந்து மரக்கொண்டையானது சாய்ந்துவிடும். இந்த வண்டுகளை கட்டுப்படுத்த தென்னை மரங்களில் பச்சை மட்டையை வெட்டுதல் மற்றும் அரிவாள் போன்ற சாதனங்களால் துளையிடுவதை தவிர்க்க வேண்டும். அவற்றின் மூலமே வண்டுகள் மரத்தினுள் ஊடுருவுகின்றன. சிவப்பு கூண் வண்டு தாக்கி இறந்த மரங்களை வெட்டி முழுவதுமாக தீயிலிட்டு கொழுத்தி அழித்து விடுவதால் மற்ற

மரங்களில் தாக்குதல் தொடர்வதை தவிர்க்கலாம்.

தாக்கப்பட்ட மரங்களை கண்டறிந்து அவற்றிலுள்ள துளைகளை(மேலே உள்ள ஒரு துளையை தவிர்த்து) களிமண் அல்லது சிமெண்ட் கொண்டு அடைத்துவிட
வேண்டும்.

பின் மேலேயுள்ள துளையின் வழியாக 1 சதவீதம் கார்பர் மருந்தினை மரத்திற்கு ஒரு லிட்டர் வீதம் புணல் கொண்டு ஊற்றி பின் அத்துளையினையும்
சிமெண்ட் கொண்டு மூட வேண்டும். தாக்கப்பட்ட மரங்களில் 10 சதவீதம் மோனோகுரோட்டோபாஸ் மருந்தினை கலந்து வேர் வழியாக செலுத்தியும்
கட்டுப்படுத்தலாம். இனக்கவர்ச்சி பொறிகளை ஏக்கருக்கு 2 என்ற விகிதத்தில் வைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.

இந்த இனக்கவர்ச்சி பொறிகள் குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலையத்தில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். கூடுதல் விபரம் அறிய சிவகங்கை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை அணுகலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**கண்ணாமூச்சி ஆட்டமாடும் பருவமழை விவசாயிகள் பரிதவிப்பு**

சிவகங்கை: சிவகங்கை மாவட்டத்தில் பருவ மழை பெய்யாமல் கண்ணாமூச்சிஆட்டமாடிக்கொண்டிருப்பது விவசாயிகள் மத்தியில் பரிதவிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

சிவகங்கை மாவட்டத்தில் சுமார் 1 லட்சத்து 5 ஆயிரம் எக்டேர் நிலத்தில் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அதிகப்படியாக நெல், கரும்பு,

வாழை உள்ளிட்ட பயிர்கள் இங்கு விளைவிக்கப்படுகின்றன. மாவட்டம்

முழுவதும் பொதுப்பணித்துறை கண்மாய்கள் 716 ம், ஒன்றிய கண்மாய்கள் 4188 ம் உள்ளன. தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை மூலம் ஆண்டிற்கு 904 மி.மீ சராசரி மழை பெய்ய வேண்டும்.

ஆனால் கடந்த 2012 மற்றும் 2013 ம் ஆண்டுகளில்

மாவட்டம் முழுவதும் போதிய மழை இல்லாமல் கடும் வறட்சி நிலவியது. இதனால் விவசாயம், குடிநீர் தேவைகளுக்கு நீர் இல்லாமல் கண்மாய், குளங்கள்

முழுமையாக வறண்டன. விவசாயம் செய்த பயிர்கள் அனைத்தும் கருகியது. 2012 ம் ஆண்டு வறட்சி மாவட்டமாக சிவகங்கை அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை காலம் முடிவடைந்த நிலையில் விவசாயத்திற்கான போதிய மழை பெய்யவில்ல

மாவட்டத்தின் சில பகுதிகளில் கடந்த மாதம் லேசான மழை பெய்தது. இவைகள் குடிநீர் உள்ளிட்ட தேவைகளுக்கு பயன்படும் வகையில் இருந்தது. ஆனால் விவசாயத்திற்கு தேவையான அளவு மழை இல்லை.

பெரும்பாலான கண்மாய்கள் அனைத்தும் முழுமையாக வறண்ட நிலையிலேயே காணப்படுகிறது. தென்மேற்கு பருவமழை பெய்யும் பட்சத்தில் ஆடி மாதத்தில் விதைப்பு பணி தொடங்கி தற்போது அடுத்த கட்ட பணிகள் நடந்திருக்கும். ஆனால் மழை இல்லாததால் விதைப்பு பணி நடக்கவில்லை.

இனி வடகிழக்கு பருவமழை பெய்தால் மட்டுமே விவசாயப்பணிகள் தொடங்கப்படும். செப்டம்பர் மாதம் தொடங்கிவிட்ட நிலையில் இதுவரை விதைப்பு பணிகள் உள்ளிட்ட விவசாயத்திற்கான ஆரம்பகட்ட

பணிகள் தொடங்கும் அளவிற்கான மழை இல்லை என்பதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் வீரபாண்டி கூறியதாவது: கடந்த மூன்று ஆண்டுகளில் கடந்த ஆண்டு மட்டுமே மாவட்டத்தின் சில பகுதிகளில் ஓரளவு விளைச்சல் இருந்தது. அதற்கு முந்தைய இரண்டு ஆண்டுகளில் மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயத்திற்கான ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கி போதிய மழை இல்லாமல் அவைகள் வீணாகிப்போனது. இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் நஷ்டம் ஏற்பட்டது. விவசாயப்பணிகளுக்கு வாங்கிய கடன்களை கட்ட முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர். ஏராளமானோர் வேறு வேலைகளுக்கு வெளி மாவட்டங்களுக்கு சென்றுவிட்டனர். இந்நிலையில் இந்த ஆண்டு பருவ மழை தொடங்கி நன்கு பெய்யும் என கூறப்பட்டது. ஆனால் தென் மேற்கு பருவ மழை முழுமையாக இல்லை.

தொடர்ந்து வறட்சி நிலவி வரும் நிலையில் இந்த ஆண்டும் மழை இல்லாமல் விவசாயம் பொய்த்துப்போனால் விவசாயிகளின் நிலை கடும் பாதிப்புக்குள்ளாகும். இவ்வாறு அவர் கூறினார்.

**கால்நடைகளுக்கான கோமாரி தடுப்பூசி முகாம்**

விருதுநகர்: கால்நடைகளுக்கு கால் மற்றும் வாயில் காணை (கோமாரி) நோய் தாக்குவதால் கால்நடை வளர்ப்போருக்கு பெரிய இழப்பு ஏற்படுகிறது. இந்நோய் பாதிக்கப்பட்ட மாடுகளின் சிறுநீர், உமிழ்நீர், சாணம் மூலம் மற்ற கால்நடைகளுக்கும் பரவுகிறது.விருதுநகர் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி 2011ம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப்பட்டது.

இதுவரை 8 சுற்று தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. தற்போது 9வது சுற்று தடுப்பூசி போடும் பணி செப்.1ம் தேதி துவங்கி 21ம் தேதி வரை நடைபெறுகிறது. மாவட்டத்தில் உள்ள 2.25 லட்சம் பசு மற்றும் எருமையினங்களுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட உள்ளது. கால்நடை வளர்ப்போர் தங்களது பசுக்கள், காளைகள், எருமைகள், மற்றும் 4 மாதங்களுக்கு மேற்பட்ட இளம்கன்றுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டு பயன்பெறுமாறு கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கரூர் மாவட்டத்தில் 1,88,250 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிசிறப்பு முகாமில் பயன்பெற அழைப்பு

கரூர், : கரூர் மாவட்டத்தில் கோமாரி நோய் தடுப்பூசி 1,88,250 கால்நடைகளுக்கு போட திட்டமிடப்பட்டுள்ளது, கரூர் எஸ்.வெள்ளாளப்பட்டியில் கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசிக்கான 9வது சுற்றுமுகாம் நடைபெற்றது. கலெக்டர் ஜெயந்தி கலந்துகொண்டு தடுப்பூசி முகாமை துவக்கி வைத்தார். அவர் பேசுகையில், தேசிய கால் மற்றும் வாய் கோமாரி நோய் கால்நடைகளுக்கு வராமல் இருக்கும் வகையில் மத்திய, மாநில அரசு இணைந்து கோமாரி நோய் தடுப்புத்திட்டம் துவக்கப்பட்டு தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் 6 மாதத்திற்கு ஒருமுறை சிறப்பு முகாம் நடத்தி தடுப்பூசி வழங்கப்படுகிறது. இதனடிப்படையில் கரூரில் 9வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவக்கப்பட்டு 1ம்தேதி முதல் வரும் 21ம்தேதி வரை முகாம் நடைபெறுகிறது. அனைத்து கிராமம், குக்கிராமங்கள் என 57 இடத்தில் இந்த சிறப்பு முகாம் நடக்கிறது. ஒவ்வொரு கிராமத்திலும் பசுவினம், எருமை இனங்களை கணக்கிட்டு அவை அனைத்திற்கும் தடுப்பூசி போடப்பட்டு வருகின்றன. கால் மற்றும் வாய் கோமாரி நோய் குறிப்பாக கலப்பின மாடுகளை அதிகம் தாக்கி கால்நடை வளர்ப்பவர்களுக்கு பொருளாதார உற்பத்தி இழப்பை

ஏற்படுத்துகிறது.

மேலும் கறவை மாடுகளில் பால் உற்பத்தி குறைவு மற்றும் கறவை மாடுகளின் சினைப்பிடிப்பு தடைபடுவது, இளம் கன்றுகளின் இறப்பு போன்ற பாதிப்புகளில் இருந்து தவிர்க்கவே கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. இந்த நோய் பொதுவாக குளிர் மற்றும் பனி காலங்கள் மற்றும் வெளியிடங்களில் இருந்து வாங்கி வரப்படும் கால்நடைகள் மூலமாக பரவுவதால் அதை தடுக்கின்ற விதமாக கால்நடை பராமரிப்புத்துறை மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தடுப்பு மருந்தினை குளிரூட்டும் அறையில் வைத்து தயார்நிலையில் அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் மருத்துவக்குழு மூலம் எடுத்து சென்று தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. கரூர் மாவட்டத்தில் உள்ள 1 லட்சத்து 88ஆயிரத்து250 கால்நடைகளுக்கு வழங்க திட்டமிட்டு செயல்பட்டு வருகின்றனர். எனவே தங்கள் பகுதியில் நடைபெறும் கோமாரி நோய் தடுப்பூசி சிறப்பு முகாமில் கால்நடைகளுக்கு கட்டாயம் தடுப்பூசி போட்டு நோய்தாக்குதலில் இருந்து கால்நடைகளை பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்றார். இந்நிகழ்ச்சியில் கால்நடைபராமரிப்புத்துறை இணை இயக்குனர் டாக்டர் ராமநாதன், உதவி இயக்குனர்கள் டாக்டர்கள் குழந்தைசாமி, முருகன், ராஜேந்திரன், வட்டார மருத்துவ அலுவலர் கன்னியப்பன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**இயந்திர நெல் நடவுப் பயிருக்கு எக்ே◌டருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வேளாண் துறை தகவல்**

ஆலங்குடி, : திருவரங்குளம் வட்டார வேளாண் உதவி இயக்குநர் ரெங்கசாமி கூறியதாவது: நடப்பு சம்பா பருவத்தில் ஆட்கள் பற்றாக்குறையை தவிர்க்க ஏதுவாக இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு எக்ே◌டருக்கு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்கப்படும். இவ்வாறு இயந்திரம் மூலம் நடவுச் செய்ய எக்டேருக்கு 30

கிலோ விதைகளே போதுமானது. இவற்றை நெல் நாற்றுத் தட்டுகள், அல்லது பாய் நாற்றங்கால் அமைத்து 15 முதல் 20 நாட்கள் வயதுடைய இளம் நாற்றுகளை இயந்திர நடவுக்குப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு நடவுச் செய்வதால் அதிக தூர்கள் உருவாகி நல்ல காற்றோட்ட வசதியும் பயிர்களுக்குக் கிடைக்கும். மேலும் களைகளைக் கட்டுப்படுத்த கோனாவீடர் கருவியை எளிதாகப் பயன்படுத்தவும் முடியும். எனவே இந்த வாய்ப்பை அனைத்து விவசாயிகளும் பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டும் என்றார்.

இயற்கை பண்ணையில் சிறப்பு முகாம் நச்சற்ற உணவு உற்பத்தியை பெருக்குவது எப்படி? வேளாண் மாணவர்களுக்கு பயிற்சி

ஆலங்குடி, : நச்சற்ற உணவு உற்பத்தியை பெருக்குவது எப்படி என்பது குறித்து பெரம்பலூர் ரோவர் வேளாண் கல்லூரி மற்றும் ஆதிபராசக்தி வேளாண் கல்லூரிகளில் பயிலும் இறுதியாண்டு மாணவ, மாணவிகளுக்கான சிறப்பு பயிற்சி முகாம் புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அடுத்த ஒடுகம்பட்டியில் உள்ள கொளுஞ்சி இயற்கை வேளாண் பண்ணையில் 10 நாட்கள் நடைபெற்றது. 2 கட்டங்களாக நடத்தப்பட்ட இப்பயிற்சி முகாமை பண்ணை இயக்குநர் ஆஸ்வோல்டு குவின்டால் துவக்கிவைத்துப் பேசியதாவது: பெருகி வரும் மக்கள் தொகைக்கேற்ப வேளாண் உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவை விவசாயிகளுக்கும், அவர்களை வழிநடத்த வேண்டிய தேவை வேளாண் அலுவலர்களுக்கும் அனைத்தையும் செய்துதர மத்திய, மாநில அரசுகளுக்கும் அவசியம் ஏற்பட்டுள்ளது. இதேபோல் நவீன வேளாண்மையில் கலந்திருந்த ரசாயன நச்சுக்களைக் குறைத்து மனித இனத்தைக் காக்க வேண்டிய அவசியமும் தற்போது ஏற்பட்டுள்ளது.

எனவே, நச்சற்ற உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. மற்றவர்களை வாழவைக்கும் விவசாயிகள் தங்களைத் தாங்களே நச்சு உணவில் இருந்து காத்துக்கொள்ள வேண்டி உள்ளது.

இதற்காக உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகளைச் சந்தித்து அவர்களுக்கு கற்றுக்கொடுக்க இதுபோன்ற களப்பயிற்சி வழங்கப்படுகிறது என்றார். முகாமில் குடும்பம் என்ற தொண்டு நிறுவனம் துவங்கியது முதல் அதன் அவசியப் பணிகள் பற்றி செல்லத்துரை, இயற்கை விவசாயம் பற்றி ரெங்கராஜூ, சிறுதானிய விதை உற்பத்தி குறித்து உஷா நந்தினி, இடுபொருள் செயல்விளக்கம், மூலிகைக்கரைசல் ஆகியவை பற்றி பாஸ்கர் ஆகியோர் விளக்கிக் கூறினர்.

மேலும், ஒடுகம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் பயிலும் பசுமைப் படை மாணவர்களுக்கு வட்டப்பாத்தி காய்கறித் தோட்டம் அமைப்பது, நீர் ஆவியாவதைத் தடுக்கும் விதமாக மூடாக்கு முறையில் தோட்டங்கள் வளர்ப்பது குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாட்டை பள்ளித் தலைமையாசிரியர் ஆறுமுகம் செய்திருந்தார்.

வாலியம்பட்டி, குன்றாண்டார்கோயில். வீரப்பூர், ஒடுகம்பட்டி மற்றும் சுற்று வட்டாரக் கிராமங்களில் இதுபோன்ற களப் பயிற்சி நடத்தப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை மணிவாசகம் செய்திருந்தார். முகாம் நிறைவு நாளில் நஞ்சற்ற உணவு முறைகளின் அவசியம் குறித்து மாணவ, மாணவிகள் நடத்திய பல்சுவை நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தன. முன்னதாக, துணை இயக்குநர் பங்கயவல்லி வரவேற்றார். முடிவில் சஞ்சீவி நன்றி கூறினார்.

**கம்பம் உழவர் சந்தையில் ஓணம்பண்டிகை காய்கறி விற்பனை ஓகோ**

கம்பம்: ஓணப்பண்டிகையையொட்டி கம்பம் உழவர் சந்தையில் கடந்த ஆண்டைக்காட்டிலும் இந்தாண்டு அதிகமான காய்கறிகளை கேரள மக்கள் வாங்கிச்

சென்றனர். இதனால், தமிழக காய்கறிகளில் விஷத்தன்மை அதிகமாக

உள்ளது என கேரள அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் குற்றச்சாட்டு பொய்யாகி

உள்ளது.விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இடைத்தரகர்களின்றி நேரடியாக பொதுமக்களுக்கு விற்பனை செய்ய, தமிழக அரசால் 1999ல் உழவர்சந்தைகள் மாநிலம் தொடங்கப்பட்டன. கம்பத்தில் கடந்த 2000ல் உழவர்சந்தை தொடங்கப்பட்டது. விற்பனையிலும், காய்கறி வரத்திலும் தமிழகத்திலுள்ள 150 உழவர்சந்தைகளில் முதல் பத்து இடத்திலும், தேனிமாவட்டத்தில் முதலிடத்தையும் பெற்றுள்ளது

கம்பம் உழவர்சந்தை. கம்பம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கூடலூர், குள்ளப்பகவுண்டன்பட்டி, கருநாக்கமுத்தன்பட்டி, நாராயணத்தேவன் பட்டி, சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி கிராமப்பகுதிகளிலிருந்தும் நாள்தோறும் 90 விவசாயிகள் வரை தங்கள் விளைபொருளை கம்பம் உழவர்சந்தையில் கொண்டுவந்து விற்பனை செய்கின்றனர்.

தமிழக கேரள எல்லைப்பகுதியான கம்பம்மெட்டு, குமுளி பகுதிகள் அருகே இருப்பதால் உள்ளூர் தவிர கேரளப்பகுதிகளில் இருந்தும் ஏராளமானோர் இங்கு காய்கறிகள் வாங்கிச்செல்கின்றனர். நாளொன்றுக்கு சுமார் 30 டன் காய்கறிகள் ரூ.5 லடசம் வரை விற்பனை நடைபெற்று வருகிறது. கடந்த சில மாதங்களாக தமிழகத்தில் இருந்து கொண்டு செல்லப்படும் காய்கறிகளில் அதிக விஷத்தன்மை உள்ளதாக கேரளா குற்றம் சாட்டியதோடு, பதிவுச்சான்றும், உரிமமும் இருந்தால் மட்டுமே காய்கறிகள் மற்றும் உணவுப்பொருள் அனுமதிக்கப்படும் என்றனர். இதனால் தமிழகப்பகுதியில் இருந்து கேரளா செல்லும் காய்கறிகளின்

விற்பனை குறைந்ததாக விவசாயிகள் சிலர் கருத்து தெரிவித்தனர். ஆனால், கேரளாவில் ஓணப்பண்டிகையையொட்டி கடந்த ஆண்டைக்காட்டிலும் கம்பம் உழவர்சந்தையிலிருந்து இந்தாண்டு அதிகமாக காய்கறிகள் விற்பனையானது. கடந்த ஆண்டு ஓணப்பண்டிகையான செப்டம்பர் மாதத்தில் கம்பம் உழவர் சந்தையில் 2,788 விவசாயிகளின் 913.07 டன் (9 லட்சத்து 13 ஆயிரத்து 75 கிலோ) ரூ 1.81 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டது.இந்த ஆண்டு ஓணப்பண்டிகையான ஆகஸ்ட் மாதத்தில் 2832 விவசாயிகளின் 1035.80 டன் (10

லட்சத்து 35 ஆயிரத்து 800 கிலோ) ரூ 1.90 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது தமிழக காய்கறிகளுக்கு கேரளாவில் மவுசு குறையவில்லை என்பதை காட்டுவதோடு, கேரள அரசு மற்றும் அரசியல்வாதிகளின் குற்றச்சாட்டை பொய்யாக்கி உள்ளது.

**எண்ணெய் வித்து பயிர்களில் பூச்சி மேலாண்மை வேளாண்துறை ஆலோசனை**

சின்னமனூர்:ஆமணக்கு, சூரியகாந்தி உள்ளிட்ட எண்ணெய் வித்து பயிர்களில் பூச்சி மேலாண்மை குறித்து வேளாண் துறையினர் ஆலோசனை வழங்கி உள்ளனர்.தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் முக்கிய எண்ணெய் வித்து பயிர்களில் நிலக்கடலை, எள், ஆமணக்கு, சூரியகாந்தி ஆகியவை முக்கிய பயிர்களாக

விளங்குகின்றன. தமிழகத்தில் சுமார் 5.02 லட்சம் ஹெக்டேர்களில் எண்ணெய் வித்து பயிர்கள் மானாவாரியாகவும், இறவையிலும் சாகுபடி செய்யப்படுகின்றன.

எண்ணெய் வித்து பயிர்களில் ஆமணக்கு அதிகளவில் சாகுபடி செய்யப்படுபவை ஆகும்.தமிழகத்தில் ஆமணக்கு மானாவாரியில் ஏப்ரல்-

மே, ஜூன்-ஜூலை,

ஜூலை-ஆகஸ்டு பட்டங்கள் மிகவும் உகந்தவை. ஆமணக்கு பயிரிட பாத்தி அமைத்தல், உரமிடுதல், நுண் ஊட்டமிடுதல், ஊட்டச்சத்து கலவை தெளிப்பு, விதை அளவு, விதை நேர்த்தி, களை கட்டுப்பாடு, பாசனம் ஆகியவற்றை வேளாண்துறையினிடம் ஆலோசனை பெற்று அதன்படி கடைபிடித்தால் நல்ல விளைச்சல் பெறலாம்.

அதுபோல் பூச்சி மேலா ண்மையில் விவசாயிகள் அதிக அக்கறை காட்ட வேண்டும். கோடை மழைக்கு முன் வரப்புகளிலும், நிழலான இடங்களிலும், மண்ணில் புதைந்துள்ள கூட்டுப்புழுக்களை உழவு செய்து வெளிக்கொண்டு வந்து அழிக்க வேண்டும். விளக்குப்பொறி அல்லது தீப்பந்தம் வைத்து தாய் அந்திப்பூச்சிகளைக் கவர்ந்து அழிக்க வேண்டும். பயிர்களில் இடப்பட்டுள்ள முட்டைகளை சேகரித்து அழிக்க வேண்டும். தாக்கப்பட்ட வயல்களைச் சுற்றி 30 சென்டி மீட்டர் ஆழம் மற்றும் 25 சென்டி மீட்டர் அகலத்தில் செங்குத்தாக குழிகள் அமைத்து புழுக்கள் பாதிக்கப்பட்ட வயல்களில் இருந்து பரவுவதை தடுக்க வேண்டும்.

எக்டேருக்கு 25 கிலோ என்ற அளவில் பாசலோன் 4%, கார்பாரில் 10%, பெனிட்ரோதியான் 2% ஆகியவை கலந்து தெளிக்க வேண்டும். 1 எக்டேருக்கு சூடோமோனாஸ் ஃபுளுரசன்ஸ் 2.5 கிலோவுடன், 50 கிலோ மக்கிய தொழுவுரத்தை கலந்து தெளிக்க வேண்டும். மேலும், நோய் தென்படும் இடங்களில்

கார்பன்டாசிம் லிட்டருக்கு 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளித்தால் பூச்சிகளின் தாக்குதல் இருக்காது. இதுதொடர்பான கூடுதல் தகவல்களுக்கு அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்களையோ அல்லது வேளாண் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**1.69 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி**

அரியலூர், :அரியலூர் மாவட்டத்தில் 1.69 லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட உள்ளதாக முகாமில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் கோமாரி நோய் இல்லா மாவட்டமாக உருவாக்க வேண்டும் எனக்கருதி முன்குட்டியே கால்நடைகளுக்கு நோய்தடுப்பூசி போடப்படுவதற்கு பொதுமக்களுக்கு அவ்வப்போது கால்நடைத்துறை சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதைத்தொடர்ந்து அரியலூர் மாவட்டத்தில் முதற்கட்டமாக திருமானூர் ஒன்றியம் பார்ப்பனஞ்சேரி கிராமத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று துவங்கியது. முகாமினை கலெக்டர் சரவணவேல்ராஜ் துவங்கி வைத்தார். பின்னர் அவர் தெரிவித்தாவது கால்நடைகளுக்கு கோமாரி நோய் வருவதை முன்கூட்டியே தடுக்கும் வகையில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தற்போது தொடங்கப்பட்டு 21ம் தேதி வரை கால் வாய்நோய் தடுப்பூசிப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.மேலும் நம் மாவட்டத்தில் 201 ஊராட்சிகளில் ஒரு லட்சத்து 69 ஆயிரம் கால்நடைகள் பயன்பெறும் வகையில் 13 லட்சத்து 44ஆயிரம் மதிப்பில் தடுப்பூசி போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்காக கால்நடை மருத்துவர்கள் மற்றும் உதவியாளர்கள் அடங்கிய 12 குழுக்கள் அமைக்கப்பட்டு இக்குழுக்கள் ஒவ்வொரு கிராமத்திற்கும் சென்று கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடும் பணியை மேற்கொள்வார்கள். எனவே பொதுமக்கள் அனைவரும் கட்டாயம் பயன்படுத்தி கோமாரி நோய் இல்லா மாவட்டமாக அரியலூர் திகழ வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். இம்முகாமில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல

இணை இயக்குனர் டாக்டர் பாஸ்கர், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் செந்தில், உதவி கால்நடை மருத்துவ அலுவலர் பாஸ்கரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**மருத்துவகுணம் அதிகம் நிறைந்த நோனி பழங்கள்_: ராமநாதபுரம் விவசாயி சாகுபடி செய்து சாதனை_**



மருத்துவக் குணம் நிறைந்த நோனி பழங்களை, ராமநாதபுரம் மாவட்டத்தில் சாகுபடி செய்து சாதித்துள்ளார் பஞ்சம்தாங்கி கிராம விவசாயி ஒருவர்.

தமிழகத்தின் பூர்வீக மரமான மஞ்சனத்தி வகையைச் சார்ந்தது வெண் நுணா என்னும் நோனி மரம். ஆஸ்திரேலியா, மொரீஷியஸ், ஜாவா, பிலிப்பைன்ஸ், ஹவாய் போன்ற நாடுகளில் அதிகம் உற்பத்தி

செய்யப்படும் நோனி பழங்களின் பழச்சாறுக்கு அமெரிக்கா, ஐரோப்பா உள்ளிட்ட மேலைநாடுகளில் கிராக்கி அதிகம்.

தமிழகத்தின் வறண்ட பாலை யாகக் கருதப்படும் ராமநாதபுரம் மாவட்டத்தில், திருப்புல்லாணி அருகே பஞ்சம்தாங்கி எனும் கிராமத்தில், மருத்துவக் குணம் நிறைந்த நோனி பழங்களை, கடந்த 6 ஆண்டுகளாக உற்பத்தி செய்து வருகிறார் விவசாயி சந்தவழியான்.

அவர் 'நோனி' பற்றி 'தி இந்து' செய்தியாளரிடம் கூறியது:

ராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மன்னர்களுக்கு, எங்கள் குடும்பத்தினர் பரம்பரை வைத்தியர்களாக இருந்துள்ளனர். அதனால் மருத்துவக் குணங்களைக் கொண்ட மரங்கள், தாவரங்களைப் பற்றிய அறிவு பாரம்பரியமாக இருந்துவந்தாலும் நான் சித்த மருத்துவர் ஆகாமல் சென்னை நியூ காலேஜில் இன்டர்மீடியட் படித்து சவூதி அரேபியா உள்ளிட்ட பல ஊர்களுக்குச் சென்று பணிபுரிந்தேன்.

**இந்தியாவில் மறு அறிமுகம்**

சில ஆண்டுகளுக்கு முன்னர், இந்தியாவில் நோனியை மறு அறிமுகம் செய்தபோது மஞ்சனத்தி மர வகையைச் சார்ந்த வெண்நுணாவான நோனியின் மீது ஈர்ப்பு உண்டானது. அதன்பின்னர், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் நண்பர் மூலம் நோனி பழக்கன்றுகளை 2008-ல் இறக்குமதி செய்து, தற்போது திருப்புல்லாணி அருகே பஞ்சம்தாங்கி கிராமத்தில் ஐந்தரை ஏக்கரில் தென்னை மரங்களுக்கு இடையே ஊடுபயிராக வளர்த்து வருகிறேன்.

**நோனி ஜூஸ்**

நடவு செய்த ஒரே ஆண்டில் நோனி காய்ப்புக்கு வந்து விடும். நான்கு ஆண்டு வயது கொண்ட ஒரு மரத்தில் 40 கிலோ முதல் 80 கிலோ வரையிலும் ஆண்டுக்கு பதினொரு மாதங்கள் விளைச்சல் எடுக்கலாம். இதில் சுமார் 10 லிட்டர் வரையிலும் நோனி ஜூஸ் எடுக்கலாம். ஒரு மரம் அதிகபட்சம் 40 ஆண்டுகள் வரையிலும் பலன் தரும்..

மரங்களில் இருந்து பறித்த நோனி பழங்களை ஐந்து மணி நேரத்துக்குள் பெரிய டிரம்களில் போட்டு, அதிகபட்சம் 22 நாட்கள் வரையிலும் இருட்டறையில் வைக்க வேண்டும். பின்னர், கலவை இயந்திரத்தில் போட்டு அரைத்து மூன்றுமுறை வடிகட்டினால் களி மாதிரி வரும். இதனை இரண்டு வாரங்கள் கழித்து ஜூஸ் ஆகப் பயன்படுத்தலாம்

தற்போது மருந்துக்கடைகளில் நோனி ஜூஸ் ஒரு லிட்டர் ரூ. 1,500 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. இவை பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட நோனி பவுடரில் இருந்துதான் தயாரிக்கப்படுகிறது.

அலோபதி மருத்துவத்தின் மீதுள்ள மோகத்தால் நாம் பாரம்பரிய மருத்துவ அறிவை இழந்து தவிக்கிறோம். நோனியின் பழம், வேர், இலைகள் என அனைத்தும் எதிர்மருந்தாக உள்ளது. கர்ப்பிணிகளுக்கு தாய்ப்பால் சுரக்க நோனிப் பழச்சாறு சிறந்த மருந்தாகப் பயன்படக் கூடியது.

**மிகச் சிறந்த பணப்பயிர்**

ஆஸ்திரேலியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளின் கடற்கரை ஓரங்களில் நோனி மரங்களை பயிரிடுகின்றனர். கடற்கரை மாவட்டமான ராமநாதபுரத்துக்கு மிகச் சிறந்த பணப்பயிராக நோனிப்பழ சாகுபடி இருக்கும். மேலும் ஒவ்வொருவரும், தமது வீட்டுத் தோட்டத்திலும் நோனி மரங்களை வளர்த்தால், நம் பாரம்பரிய மருத்துவத்தை மீட்கவும் வாய்ப்பு ஏற்படும் என்றார்.__________

**வீராணம் ஏரியிலிருந்து நாளை முதல் தண்ணீர் திறப்பு**

கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து சாகுபடிக்காக நாளை முதல் தண்ணீர் திறந்து விட தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்ட அறிக்கையில், "கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள பாசன பகுதிகளுக்கு சாகுபடிக்காக கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து

தண்ணீர் திறந்து விடுமாறு வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருங்குடி மக்களின் வேண்டுகோளினை ஏற்று, கீழணை மற்றும் வீராணம் ஏரியிலிருந்து சாகுபடிக்காக 3.9.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கடலூர், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள 1,31,903 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

**அமெரிக்க விருதுக்கு ராமேசுவரம் மீனவப் பெண் தேர்வு**



லெட்சுமி

ராமேசுவரம் அருகே சின்னப் பாலம் மீனவப் பெண் லெட்சுமி அமெரிக்க விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அமெரிக்காவில் உள்ள கலிபோர்னியா மாகாணத்தில் கடல்சார் ஆய்வு மையம் (சீகாலஜி) செயல்படுகிறது. இது உலகின் பல்வேறு பகுதிகளில் உள்ள தீவுகளில் வசிக்கும் அரிய வகை தாவர இனங்கள், கடல்வாழ் உயிரினங்களை பாதுகாப்பதற்காக இ யங்கி வருகிறது. மேலும் இந்த மையம் ஆண்டுதோறும் கடல் வாழ் உயரினங்களை பாதுகா ப்பவர்களுக்கு விருது, பாராட்டுச் சான்றிதழ் வழங்கி கவுரவிக்கிறது.

இந் நிலையில் கடந்த ஆண்டு க்கான விருதுக்காக ராமேசுவரம் அருகே உள்ள சின்ன ப்பாலத்தைச் சேர்ந்த மீனவப் பெண் லெட்சுமி தேர்வு செய்ய ப்பட்டுள்ளார்.

இது குறித்து சீகாலஜி வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:

லெட்சுமி தனது குழந்தை பருவத்தில் இருந்தே மன்னார் வளைகுடா தீவுப் பகுதிகளில் கடற்பாசிகளை சேகரிப்பதையே தொழிலாகக் கொண்டுள்ளார். மேலும் அவரது சமூகத்தைச் சேர்ந்த பல பெண்களுக்கு பாசி சேகரிப்பதே வாழ்வாதாரமாக உள்ளது. ஆனால், அரசு அதிகாரிகள் பாசி சேகரிக்க தடை விதித்தும், பாசி சேகரிக்கும் பெண் களுக்கு அபராதம் விதித்தும், மீனவப் பெண்களின் படகுகளை கைப்பற்றியும் அவர்களது வாழ் வாதாரத்தை சுரண்டி வந்தனர்.

இது குறித்து மாவட்ட நிர்வாகம், அரசு அதிகாரிகள், கடல்சார் விஞ்ஞானிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தி பாரம்பரிய முறையில் பாசி சேகரிப்பதால் கடலில் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படுவதில்லை என்பதை லெட்சுமி எடுத்துரைத்தார்.

மேலும் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 25 மீனவ கிராமங்களில் 2000-க்கும் மேற் பட்ட பாசி சேகரிக்கும் மீனவப் பெண்களை ஒருங்கிணைத்து கூட்டமைப்பு ஏற்படுத்தி அவர் களுக்கு பயோ மெட்ரிக் கார்டுகள் வழங்கி வாழ்வாதாரத்தை தொடர வைத்துள்ளார். இதற்காக லெட்சுமி க்கு கடல்சார் சுற்றுச்சூழல் விருது வழங்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து லெட்சுமி `தி இந்து’விடம் கூறியதாவது:

சின்னப்பாலம் பகுதி மீனவப் பெண்கள் மரிக்கொழுந்து பாசி களை எடுப்பதற்கு, வனத் துறையினர் தடை விதித்ததோடு மட்டுமின்றி அபராதமும் விதிப்பா ர்கள். சில நேரங்களில் தகாத வார்த்தைகளில் திட்டுவார்கள். ஒருமுறை கடலுக்குள் நாங்கள் பாசி சேகரித்தபோது கரையில் வைத்திருந்த ஆடைகளை வனத் துறையினர் எடுத்துச் சென்றனர். சொல்ல முடியாத துயரங்களை அனுபவித்தோம். இப்போது

எங்க ளை அங்கீகரிக்கும் விதமாக இந்த விருது கிடைத்துள்ளது. இந்த விருது அக்டோபர் 10-ம் தேதி வழங்கப்பட உள்ளது என்றார்.

**பண்ணைப் பசுமை கடைகளில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.55-க்கு விற்பனை: தமிழக அரசு தகவல்**



முதல்வரின் நடவடிக்கையின் காரணமாக, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக வெங்காயம் கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக அரசு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த செய்தி குறிப்பில், "வெளிச்சந்தையில், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் செல்லும் காலங்களில், வெளிச்சந்தை விலை உயர்வினை கட்டுக்குள் வைக்கும் நடவடிக்கையாகவும், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், நுகர்வோர்களுக்கு தரமான பொருள்கள் நியாயமான விலையில் ஒரே சீராக கிடைக்கவும், வழி செய்யும் வகையில் "விலை நிலைப்படுத்தும் நிதியம்" ஒன்று 100 கோடி ரூபாய் நிதித் தொகுப்புடன் முதல்வர் உத்தரவின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மிளகாய், புளி மற்றும் நல்லெண்ணெய் போன்ற அத்தியவாசியப் பொருட்களின் விலையினை கட்டுப்படுத்துவதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சமீபத்தில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பின் வெளிச்சந்தை விலையினை கட்டுப்படுத்தும் வகையில், துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை குறைந்த விலையில் விற்கும் ஒரு விற்பனை திட்டம் 24.5.2015 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

வெளிச் சந்தையில் உயர்ந்து வந்த காய்கறிகளின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவசாயிகள் தமது விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற்றிடவும், ஏழை எளிய நடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையில், விவசாயிகளையும் நுகர்வோர்களையும் இணைக்கக் கூடிய மக்கள் சேவைத் திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் 20.6.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக தரமான காய்கறிகள் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் இரண்டு நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உள்ளன.

2013- ஆம் ஆண்டு வெங்காயத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்த போது, முதல்வர் உத்தரவின்படி மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களிலிருந்து அதிக அளவில் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளின் வாயிலாக குறைந்த விலையில் தரமான வெங்காயம், தங்கு தடையின்றி நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டது.

தற்போது, பருவநிலை மாறுதலால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக, வெங்காயத்தின் விளைச்சல் குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது.

எனவே, இந்த விலையேற்றத்தின் காரணமாக பொதுமக்கள் பாதிப்படையாமல் இருக்கும் வகையில் வெங்காய விலையேற்றத்தினை கட்டுப்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து வெங்காயம் கொள்முதல் செய்து, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதல்வர் உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், நுகர்வோர்களுக்கு தேவையான அளவு வெங்காயம் வெளிச் சந்தையை விட குறைந்த விலையில் தங்கு தடையின்றி வழங்குவதற்காக கர்நாடக மாநிலம் யஷ்வந்த்பூர் பகுதியிலிருந்தும், மகாராஷ்டிரா மாநிலம் லாசல்கான் பகுதியிலிருந்தும் கூடுதலாக பெரிய வெங்காயம் கொள்முதல் செய்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

முதல்வர் உத்தரவின்படி செயல்படுத்தப்படும் இந்த நடவடிக்கை மூலம் தனியார் விற்பனை நிலையங்களில் 70 ரூபாய் வரை விற்கப்படும் வெங்காயத்தின் விலையை விட குறைவான விலையில் வெங்காயம் பொதுமக்களுக்கு கிடைக்க வழி வகை ஏற்பட்டுள்ளது.

முதல்வரின் நடவடிக்கையின் காரணமாக வெங்காயம் குறைந்த விலையில் நுகர்வோர்களுக்கு பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தங்கு தடையின்றி கிடைப்பதற்கும், தேவைக்கு ஏற்ப, கூடுதல் வெங்காயம் வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

**பண்ணை பசுமை கடைகளில் ரூ.55க்கு வெங்காயம் விற்பனை: ஜெயலலிதா நடவடிக்கை**



சென்னை, செப். 2–

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:–

மக்கள் நலன் ஒன்றையே லட்சியமாகக் கொண்டு பல முன்னோடி திட்டங்களைத் தீட்டி, சிறப்பான முறையில் செயல்படுத்துவது தான் மக்கள் நலன் பேணும் அரசின் கடமை என்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தமிழக முன்னேற்றத்திற்காகவும், தமிழக மக்களின் நலனுக்காகவும் எண்ணற்ற திட்டங்களை முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

வெளிச்சந்தையில், அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கட்டுக்கடங்காமல் செல்லும் காலங்களில், வெளிச்சந்தை விலை உயர்வினை கட்டுக்குள் வைக்கும் நடவடிக்கையாகவும், விவசாயிகளின் விளைபொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்கவும், நுகர்வோர்களுக்கு தரமான பொருள்கள் நியாயமான விலையில் ஒரே சீராக கிடைக்கவும், வழி செய்யும் வகையில் ‘‘விலை நிலைப்படுத்தும் நிதியம்’’ ஒன்று 100 கோடி ரூபாய் நிதித் தொகுப்புடன் முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மிளகாய், புளி மற்றும் நல்லெண்ணெய் போன்ற அத்தியவாசியப் பொருட்களின் விலையினை

கட்டுப்படுத்துவதற்காக இந்த நிதியம் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும், சமீபத்தில் துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பின் வெளிச்சந்தை விலையினை கட்டுப்படுத்தும் வகையில், துவரம் பருப்பு மற்றும் உளுத்தம் பருப்பு ஆகியவற்றை குறைந்த விலையில் விற்கும் ஒரு விற்பனை திட்டம் 24.5.2015 அன்று முதல்–அமைச்சர் ஜெயலலிதாவால் துவக்கி வைக்கப்பட்டது.

வெளிச்சந்தையில் உயர்ந்து வந்த காய்கறிகளின் விலையினைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவசாயிகள் தமது விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற்றிடவும், ஏழை, எளிய நடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையில், விவசாயிகளையும் நுகர்வோர்களையும் இணைக்கக் கூடிய மக்கள் சேவைத் திட்டமான பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் முதல்–அமைச்சர் ஜெயலலிதா 20.6.2013 அன்று துவக்கி வைக்கப்பட்டது.

தற்போது தமிழ்நாட்டில் 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக தரமான காய்கறிகள் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது. சென்னையில் இரண்டு நகரும் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் உள்ளன.

2013– ஆம் ஆண்டு வெங்காயத்தின் விலை மிக அதிகமாக உயர்ந்த போது, முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் ஆந்திர மாநிலங்களிலிருந்து அதிக அளவில் வெங்காயம் கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளின் வாயிலாக குறைந்த விலையில் தரமான வெங்காயம், தங்கு தடையின்றி நுகர்வோர்களுக்கு வழங்கப்பட்டது.

தற்போது, பருவநிலை மாறுதலால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக, வெங்காயத்தின் விளைச்சல் குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது.

எனவே, இந்த விலையேற்றத்தின் காரணமாக பொது மக்கள் பாதிப்படையாமல் இருக்கும் வகையில் வெங்காய விலையேற்றத்தினை

கட்டுப்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து வெங்காயம் கொள்முதல் செய்து, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்ய தீவிர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதல்– அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், நுகர்வோர்களுக்கு தேவையான அளவு வெங்காயம் வெளிச்சந்தையை விட குறைந்த விலையில் தங்கு தடையின்றி வழங்குவதற்காக கர்நாடக மாநிலம் யஷ்வந்த்பூர் பகுதியிலிருந்தும், மகாராஷ்டிரா மாநிலம் லாசல்கான் பகுதியிலிருந்தும் கூடுதலாக பெரிய வெங்காயம் கொள்முதல் செய்து சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் வாயிலாக கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. முதல்– அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி செயல்படுத்தப்படும் இந்த நடவடிக்கை மூலம் தனியார் விற்பனை நிலையங்களில் 70 ரூபாய் வரை விற்கப்படும் வெங்காயத்தின் விலையை விட குறைவான விலையில் வெங்காயம் பொதுமக்களுக்கு கிடைக்க வழி வகை ஏற்பட்டுள்ளது.

முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் நடவடிக்கையின் காரணமாக வெங்காயம் குறைந்த விலையில் நுகர்வோர்களுக்கு பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் தங்கு தடையின்றி கிடைப்பதற்கும், தேவைக்கு ஏற்ப, கூடுதல் வெங்காயம் வெளி மாநிலங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு வழங்குவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

விகடன்

**குறைந்த விலையில் வெங்காயம் விற்பனை: ஜெயலலிதா உத்தரவு!**



**சென்னை**: வெங்காய விலையை கட்டுப்படுத்த, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் குறைந்த விலையில் பொதுமக்களுக்கு வெங்காயம் கிடைக்க ஜெயலலிதா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது குறித்து இன்று அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், " வெளிச் சந்தையில், வெளிச் சந்தையில் உயர்ந்து வந்த காய்கறிகளின் விலை யினைக் கட்டுப்படுத்தும் வகையிலும், விவசாயிகள் தமது விளை பொருள்களுக்கு நல்ல விலை பெற்றிடவும், ஏழை எளிய நடுத்தர மக்கள் தரமான காய்கறிகளை குறைந்த விலையில் பெற்று பயன்பெறும் வகையில், சென்னையில் 2 இடங்கள் உள்பட தமிழகத்தில் 58 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டு தரமான காய்கறிகள் நுகர்வோர்களுக்கு குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகிறது.

தற்போது, பருவநிலை மாறுதலால் ஏற்பட்ட தாக்கத்தின் காரணமாக, வெங்காயத்தின் விளைச்சல் குறைந்ததால் வெளிச்சந்தையில் வெங்காயத்தின் விலை அதிகரித்து வருகிறது.

இதனால் பொதுமக்கள் பாதிப்படையாமல் இருக்க வெங்காய விலையேற்றத்தினை கட்டுப்படுத்த வெளி மாநிலங்களிலிருந்து

வெங்காயம் கொள்முதல் செய்து, பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்ய ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். அதன்படி சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள 42 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் கிலோ 55 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் தனியார் விற்பனை நிலையங்களில் 70 ரூபாய் வரை விற்கப்படும் வெங்காயம் குறைவான விலையில் பொதுமக்களுக்கு கிடைக்கும்" என்று கூறப்பட்டுள்ளது.